பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 06 திங்கட்கிழமை (21.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 025

# தமிழர் தாயகக் கோட்பாட்டை மஹிந்த ஏற்றுக்கொள்கிறாரா?

## ஜே.வி.பியின் செயலாளர் கேட்கிறார்



கொழும்பு, டிசெம்பர் 21

**ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதற்காக ஈ.பி.டி. பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா முன்வைத்துள்ள 10 நிபந்தனைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுவிட்டார் என ஈ.பி.டி.பி. சொல்கிறது. அப் படியாயின் அந்தக் கோரிக்கைகளில் ஒன்றான தமிழர் தாயகக் கோட்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்கிறாரா? இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளதுஜே.வி.பி.**

ஜே.வி.பியால் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவே இக்கேள்வியை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகாவைப் பார்த்து அரசு நன்றாகப் பயந்துபோயுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைய வந்த புலித் தலைவர்கள் படைத் தரப்பால் சுடப்படவில்லை

### 58 ஆவது படையணித் தளபதி சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 21

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் வெள்ளைக்கொடிகளுடன் வந்த போது அவர்களை படையினர் சுட்டுக்கொன்றனர் என வெளியான தகவலில் உண்மையில்லை - என்று 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி சவீந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார் எனக் கூறப்பட்ட தகவலில், புலிகள் அரசியல் துறையினரை சுட்டுக்கொல்லுமாறு, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவுக்கு ராஜபக்ஷ, சவீந்திர சில்வாவுக்கே உத்தர

(20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோருக்கு மரணச் சான்றிதழ் வழுங்குவதற்கு விரைவில் புதிய சட்டமூலம்

கொழும்பு, டிசெ. 21

நீண்ட காலமாக காணாமல் போனவர்கள்பட்டியலில் பதிவு செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கும் வகையில் புதிய சட்டமூலமொன்றை உருவாக்குவது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

ஒரு வருட காலத்திற்கு மேலாக குறித்த நபர் ஒருவர் பற்றிய எவ்வித தகவல்களும் கிடைக்கப் பெறாத உறவினர்கள், மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம உத்தியோகத்தர் மற்றும் சத்தியக் கடதாசி ஆகிய ஆவணங்களுடன் காணாமற்போனவர்களுக்கான மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக வடக்கு கிழக்குப் பகுதியில் அதிகளவு மக்கள் காணாமற்போயுள்ளனர் என முறைப்பாடு

(20ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பரவுகிறது டெங்கு; இரண்டு மாதங்களில் 13 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 21

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 13 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இரண்டு மாதங்களில் 650 இற்கு மேற்பட்ட டெங்கு நோயாளர் வவுனியா மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளனர் என அமைச்சின் பொது சுகாதார பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாகித்த அஹிபால கூறியுள்ளார்.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு வவுனியாவுக்கு விசேட குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்புக்கான விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்

(20ஆ பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்புப் பணி குறித்து ஐரோப்பிய ஒன்றியம் பதில் இல்லை

கொழும்பு, டிசெ. 21

இலங்கையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய்ம் இன்னமும் தீர்மானிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் 670 பேர் குடியமர்வு

கொழும்பு, டிசெ. 21

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்கியிருந்த ஒரு தொகுதி மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் 19ஆம் திகதிகளில் 670 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, கனகபுரம், ஜயந்திபுரம், உதய

(20ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்பு ஜனவரி 12, 13 இல்

கொழும்பு, டிசெ.21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு ஜனவரி 12ஆம், 13ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் 24ஆம் திக

(20ஆம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம்களில் துஷ்பிரயோகம்; அரசுக்கும் தகவல் கிடைத்துள்ளது

### மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ராஜீவ சொல்கிறார்

கொழும்பு, டிசெ.21

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் சிப்பாய்களால் மக்கள் தண்டிக்கப்பட்டமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றமை போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து அரசு அறிந்துள்ளது என்று மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க தெரிவித்தார்.

இது குறித்த ஐ.நாவின் அறிக்கையொன்று

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு அவசரப்படாது

### தீர்க்கமாக ஆராய்ந்த பின்பே இறுதி முடிவாம்

கொழும்பு, டிசெ. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் பொறுப்புவாய்ந்த கட்சி என்பதால் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை அக்கட்சி அவசரப்பட்டு மேற்கொள்ளாது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ கரன் புக் சென்ரர்

Pentium Pastels Colour

பெண்டியம் பெஸ்ரல்ஸ் கலர் சோக்கின்

ஒரு கேஸ் பெண்டியம் கலர் சோக் வாங்குபவர்களுக்கு ஒரு டசின் கலர் சோக் இலவசம் (இச்சலுகை கையிருப்பு உள்ளவரை)

யாழ்.மாவட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம்.

தொடர்புகளுக்கு:- 021 321 0960

K.K.S. வீதி, சுன்னாகம். ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
வழங்கும்
நத்தார், புது வருட கால
சிறப்புத் தள்ளுபடிகள்
டிசெம்பர் 18 முதல் ஜனவரி 05 வரை மட்டும்

**LCD MONITORS**

| | | |
|---|---|---|
| Topview 15.6" | ~~11,600/=~~ | 10,500/= |
| Viewsonic 16" | ~~14,980/=~~ | 13,500/= |
| LG 19" | ~~15,900/=~~ | 15,250/= |
| DELL 19" | ~~16,900/=~~ | 15,750/= |
| Samsung 19" (943) | ~~17,000/=~~ | 16,750/= |
| Viewsonic 19" | ~~18,900/=~~ | 17.750/= |

**PROCESSORS**

| | | |
|---|---|---|
| Intel celeron 1.8 Ghz | ~~5,400/=~~ | 4,900/= |
| Intel 2.50 Ghz Dual Core (Intel Pentium) | ~~8,750/=~~ | 8250/= |
| Intel 2.60 Ghz Dual Core (Intel Pentium) | ~~9,300/=~~ | 8500/= |
| Intel 2.93 Ghz Core 2 Duo (Intel Pentium) | ~~15250/=~~ | 14600/= |

**MOTHER BOARDS**

| | | |
|---|---|---|
| Asrock G 31 | ~~5,750/=~~ | 5,400/= |
| Foxconn | ~~5,900/=~~ | 5,500/= |
| Biostar | ~~6,200/=~~ | 5,750/= |
| Gigabyte G 31 | ~~6,400/=~~ | 5,750/= |
| Asus G 31 | ~~6,500/=~~ | 6,000/= |
| Intel DG 31PR | ~~7,500/=~~ | 7,000/= |

**HARD DISK (SATA)**

| | | |
|---|---|---|
| 80 GB SATA | ~~4,700/=~~ | 4,400/= |
| 160 GB SATA | ~~5,300/=~~ | 4,900/= |
| 250 GB SATA | ~~5,900/=~~ | 5,250/= |
| 320 GB SATA | ~~6,250/=~~ | 5,650/= |
| 500 GB SATA | ~~7,250/=~~ | 6,900/= |

**WRITERS (SATA)**

| | | |
|---|---|---|
| DVD Combo | ~~3,000/=~~ | 2,750/= |
| LG 22 X | ~~3,500/=~~ | 3,100/= |
| Samsung 22 X | ~~3,600/=~~ | 3,100/= |
| Liteon 24 X | ~~3,750/=~~ | 3,400/= |
| Hp 24 X | ~~3,900/=~~ | 3,700/= |
| Asus 24 X | ~~4,250/=~~ | 3,900/= |

**PRINTERS**

| | | |
|---|---|---|
| Hp D 1660 | ~~5,400/=~~ | 4,750/= |
| Epson Tio | ~~5,250/=~~ | 4,500/= |
| Samsung Laser printer | ~~14,500/=~~ | 13,500/= |

**SCANNERS**

| | | |
|---|---|---|
| Mustek USB | ~~5,700/=~~ | 5,250/= |
| Cannon LIDE 100 | ~~6,250/=~~ | 5,950/= |
| Hp G 2410 | ~~7,900/=~~ | 7,500/= |

**ADSL ROUTERS**

| | | |
|---|---|---|
| TP Link ADSL 2 Port | ~~4,500/=~~ | 3,900/= |
| TP Link ADSL 4 Port | ~~6,250/=~~ | 5,900/= |
| TP Link 4 Port Wireless | ~~8,250/=~~ | 7,900/= |

**SUB WOOFERS**

| | | |
|---|---|---|
| Microlab 2.1 | ~~3,250/=~~ | 2,750/= |
| Creative 2.1 | ~~3,100/=~~ | 2,700/= |
| Microlab 5.1 | ~~6,400/=~~ | 5,700/= |

**HSDP MODEMS**
Broadband 7.2 G USB
SIM Model ~~9,250/=~~ 7,750/=

**ATX CASING** (With Power supply) ~~3,250/=~~ 2,600/=

**COMPUTER CHAIR** ~~3,950/=~~ 3,250/=

**COMPUTER TABLE** ~~3,250/=~~ 2,750/=

SONY DIGITAL CAMERA
CyberShot 10.1 Mega Pix
14,900/= Only

SAMSUNG DIGITAL CAMERA
12.2 Mega Pix
16,900/= Only

Credit cards & Debit Card are Acceptable

VISA MasterCard
சகல வகையான கடனட்டைகள் மற்றும் வரவு அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
141B, Palaly Road, Thirunelvely, Jaffna - Phone : 021 222 6554
musicworld@dialognet.lk / musicworld@sltnet.lk

* இச் சலுகை உடனடிப் பணக் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே *

ASTA Advts ***0718561250***


# மலையக மக்கள் முன்னணி மஹிந்தவை ஆதரிக்கத் தீர்மானம்

கொழும்பு, டிச. 21

மலையக மக்களின் எதிர்கால அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தவும் மலையக மக்களின் சமூக மேம்பாட்டை உத்தரவாதப் படுத்தவும் பல அடிப்படைக் கோரிக்கைகளைப் பிரதான அரசியல் கட்சிகளுக்கு முன்வைத்தோம். இவற்றுக்குக் கிடைத்த உறுதிப்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கத் தீர்மானித்துள்ளோம்.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று ஹற்றனில் நடைபெற்ற கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## சிறுகதைப் போட்டியில் முதல் இடங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.21.

ஹற்றன் நஷனல் வங்கியும், இலங்கை கல்வி அமைச்சும் இணைந்து தரம் 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்கள் இடையே நடத்திய "லோவா டினைனா சிங்கித்தோ" 2009 போட்டிகள் இரண்டில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவி பாலசுப்பிரமணியம் கிருசா முதலிடத்தையும் நான்காம்இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் மாவட்ட மட்டத்தில் தமிழ் மொழியில் சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தையும், கட்டுரைப் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தரம் 9, 10, 11 ஆகிய வகுப்பு மாணவர்கள் இடையே நடத்திய போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் பீ. கார்சோ தமிழ் மொழி சிறுகதைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

(ஒ-207)

## எம்.ஜி.ஆரின் நினைவு நாள்

கொழும்பு,டிசெ.21.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் பிரபல நடிகருமான மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரனின் 22ஆம் ஆண்டு நினைவு நாளும், முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத்தலைவர் பொன். மதிமுகராஜாவின் 11ஆம் ஆண்டு நினைவும் எதிர்வரும் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் ஏற்பாட்டில் தாவடி ஸ்ரீஅம்பலவாணர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் 26 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

24 ஆம் திகதி தாவடியில் உள்ள தலைமைச் செயலகத்தில் மலர்மாலை அணிவிப்பு நிகழ்வுடன் ஆரம்பமாகும். அன்றைய தினம் பாஷையூரில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கும் மலர்மாலை அணிவிக்கப்படும். (ஒ-10)

## மரண அறிவித்தல்

### மணியசேகரம் ஜெகசோதி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மணியசேகரம் ஜெகசோதி நேற்று (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிந்தாமணி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான காராளசிங்கம், கனகசிங்கம், திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும், ஜெயராணி, திலகமலர், மனமோகனராஜா, சர்வேஸ்வரி, அமரர் விக்னேஸ்வரன் (றஞ்சன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கராஜா, பாலச்சந்திரன், விக்னேஸ்வரி, தயாநிதி ஆகியோரின் மாமியாரும், தயாளினி, பிரதீபன், பிரதாபன், தனஞ்சயன், ஜனனி, கோகுலராஜன், நிதர்சன், பரணிகா, கஜானன், காயத்திரி, சர்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2009) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
தொ.பே.இல.: 0213008974

தகவல் :
மணியசேகரம் (கணவர்),
திலகமலர் (மகள்).

அன்னை மடியில் 27.07.1976

# ஈராண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் அடியில் 21.12.2007



ஈராண்டாகியும் எம் கண்ணீர் வற்றவில்லை
இதயத்தில் எம்மோடு என்றும் - நீயிருக்கின்றாய்
பாலகன் உன் மழலை அப்பா - அப்பாவென
கதறித் தவிக்கின்றான்
அப்பாவை எங்கு நாம் தேடுவது
சிவபாலன் சிவனடியே சேர்ந்து விட்டான்
தரணி போற்ற உன்னைக் கரம்பிடித்த
உன் மனையாள் - நான் கதறித் தவிக்கின்றேன்
காலனே உனக்கு கடுகளவும் கருணையில்லையோ
என் கண்ணான கண்ணாளனை
இரக்கமின்றி ஏன் பிரித்தாய் ?

(9167б)

அமரர்
## சிவபாலன் (பேபி)

உங்கள் பாசத்தில் ஏங்கும் :
மனைவி, மகன் (திருவரங்கன்).
'ஐங்கரன் இல்லம்'
தொல்புரம், வழக்கம்பரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இடம்பெயர்ந்த தமிழர்களின் வாக்குகள்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற போரினால் தமது சொந்த- பூர்வீக - வாழ்விடங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின்- வாக்காளர்களின்- எண்ணிக்கை சுமார் இரண்டு இலட்சம் என்று தேர்தல் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இவர்களில் மிக மிகப் பெரும்பாலானோர், தமது வாக்குரிமையை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்த முடியுமா என்ற கேள்விக்குறி உயர்ந்து, எழுந்து நிற்கின்றது.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கி வாழும் பகுதிகளிலேயே வாக்களிக்க வசதி செய்வதற்கு தேர்தல் திணைக்களம் முனைந்து நிற்கின்றது. வாக்காளர்கள் அந்த வசதிகோரி அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று பத்திரிகைகள், மற்றும் ஊடகங்கள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு மூலம் கேட்கப்பட்டிருந்தனர்.

ஆனால் மொத்தம் உள்ள, வாக்களிக்கத் தகுதியான, இரண்டு இலட்சம் பேரில் இதுவரை வெறும் மூன்று சதவீதத்தினரே தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு அக்கறை காட்டியுள்ளார்கள். ஏனையோருக்கு அது சம்பந்தமான தகவல்கள் உரிய முறையில் எட்டவில்லையா அல்லது அதனை ஊக்குவிப்பதில் நிர்வாக மட்டத்தில் அக்கறை செலுத்தப்படவில்லையா என்பது கண்டறியப்பட வேண்டிய ஒன்றாகவே தொக்கி நிற்கின்றது.

எப்படியோ, இடம்பெயர்ந்தோர் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை தேர்தல் ஆணையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், அந்தப் பீடத்தைப் பிடிப்பதற்கு முதலாவது வாக்கு எண்ணிக்கையின்போது ஐம்பத்தொரு சதவீதமானவற்றைப் பெற வேண்டும். இல்லையேல் வாக்குகள் திரும்பவும் எண்ணப்பட வேண்டிய தேவை உண்டாகும்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள பிரதான வேட்பாளர்களும் சிங்கள இன உணர்வை சொத்தாக வைத்தே முட்டிமோத உள்ளார்கள். அவர்களின் வெற்றிக்கு- முதல் வாக்கு எண்ணிக்கையிலே ஐம்பது சத வீதத்திற்கு அதிகமாகப் பெறுவதற்கு- தமிழர்களின் வாக்குகளை அதிகம் திரட்ட வேண்டிய நிலை, கட்டாயம் உள்ளது. அதாவது எப்படி நோக்கினாலும், எந்த நிலையால் பார்த்தாலும் எவ்வாறு கூட்டிக் கழித்துப், பிரித்துப் பெருக்கினாலும் தமிழ் மக்களின் வாக்குகளே புதிய ஜனாதிபதி யார் என்பதனை நிர்ணயிக்கப் போகின்றன.

அதனால், பிரதான வேட்பாளர்கள் இருவரும் தமிழ் வாக்காளர்களை, அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் வாக்காளர்களை தமது பக்கம் இழுத்து, மயக்கி வாக்கு வங்கியை நிரப்ப பலவகைத் திட்டங்களையும், உத்திகளையும், தந்திரங்களையும் தீட்டத் தயாராகி விட்டார்கள். இது தொடர்பில் மிக அந்தரங்கமாக, உள்ளாடும் கள்ளாடுமாகப் பல மறைமுகக் காட்சிகள் அரங்கேறும் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் இடம்பெயர்ந்த தமிழ் வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் மிக மிக வேண்டப்படுபவர்களாக, தேர்தல் பிரதானிகளாக மாறியுள்ளனர். அவர்களின் வாக்குகள் ஆயிரம் ஆயிரம் பொன் பெறுமதியானவையாக மாறியுள்ளன; மதிக்கப்படுகின்றன.

இதுவரை நடைபெற்ற பொதுத்தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்களை விடவும், ஜனவரி 26இல் நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் அரசியல் அரங்கில் மிக வித்தியாசமான காட்சிகளை உடையது. தமிழ் மக்களை, அவர்களும் இந்த நாட்டுக் பிரஜைகளே, மக்களே என்று மனம் கொள்ளாது அவர்களை வன்னியில் கொன்று குவிப்பதற்கு ''அம்பை'' ஏவச் செய்தவரும், ஏவியவரும் தமக்குள் பிணக்குப்பட்டுக் கொண்டு மோதும் உக்கிரமான போட்டியுடன் நடைபெறப் போகிறது இந்தத் தேர்தல்.

இந்த மல்யுத்தத்தின், குத்துச் சண்டையின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சூத்திரதாரிகளாகத் தமிழ் வாக்காளர்களே உள்ளனர். அவர்கள் எடுக்கும் முடிவு, இந்த ஆட்சி பீடத்தின் தலைமையை நிர்ணயிக்கும் சந்தர்ப்பம், இதுவரை எந்தவேளையிலும் இல்லாதவாறு, புதிய நிலைமை தோற்றம்பெற்றிருக்கின்றது. தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் அனுபவித்த துன்பங்களையும் மனதில் இருத்திச் செயற்படும் அவசியத்தை உருவாக்கியுள்ளது.

பானைக்கும் கறுத்தக்கேற்றிலுக்கும் இடையில் வேறுபாடு கண்டு எந்தப் பாத்திரத்தைத் தெரிவு செய்வதென்பது ஓர் இக்கட்டான நிலை, கஷ்டமான நிலைதான்.

இருப்பினும்-

இடம்பெயர்ந்த மக்கள் தாங்களே வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கதாபாத்திரங்களாக மாறியுள்ளதால், இனியாவது தமது வாக்குரிமையைப் பயன்படுத்த உரிய கால எல்லைக்குள் விண்ணப்பிப்பதே உகந்தது; நல்லது. அது அவர்களின் ஜனநாயகக் கடமையும் ஆகின்றது.

வாக்கு என்ற அஸ்திரம் அவர்களின் கைக்கு வந்தால்தான், அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்று சிந்தித்து, தமது வெறுப்பு விருப்புக்கு ஏற்ப அதனை எய்தவியலும்.

ஆயினும் தேர்தல் திணைக்களம் எடுக்கும் கரிசனையிலும் மேற்கொள்ளும் வேகத்திலுமே எல்லாம் தங்கியுள்ளது. அது தவறின், ஜனாதிப்தித் தேர்தலில் பல மோசடிகளுக்கும் குளறுபடிகளுக்கும் வழிசமைக்கப்படும் என்பதனையும் புறமொதுக்க இயலாது.

# ஜெனரல் பொன்சேகாவுக்கு அப்பாலும் கட்டளையிடுபவர்கள் இருந்துள்ளார்களா?

கடந்த மே மாதத்தையடுத்து இராணுவத்தின் முன்னாள் தளபதியும் கூட்டுப்படைகளின் முன்னாள் பிரதம அதிகாரியுமான சரத் சந்திரலால் பொன்சேகா மிகப் பெரும் வீரராக உயர்ந்துவிட்டார் - புலிகளுக்கு எதிராக படை நடத்தி வெற்றிபெற்றமை காரணமாக.

> **நேற்று 20.12.2009 அன்று 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ள அரசியல் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இது.**

ஜனாதிபதி அவருக்குக் காணி, பணம் மற்றும் உல்லாசக் கார் முதலியவற்றைப் பரிசாக வழங்கிக் கௌரவித்தார். அதற்குப்பின் ஆறு மாதங்கள் முடிவதற்கு முன்பே தமது 40 வருட இராணுவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பொன்சேகா.

அதன்பிறகு சப்ரகமுவ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் தொடர்புகொண்டு பேசியபோது தமது ஒரு காலத்து நெருங்கிய சகாவாக இருந்தவரான கோத்தபாய ராஜபக்ஷ பற்றி தமது கசப்பான கருத்துக்கள் பலவற்றை சரத் கொட்டித் தீர்த்தார்.

ராஜபக்ஷ குடும்பத்தினரையும் அவர்களின் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தப் போவதாகத் தெரிவித்தார். உண்மையில் பொன்சேகா கடைசித் தடவையாகப் பிரியாவிடை கூறுவதற்காக அலரிமாளிகைக்குச் சென்றபோது, அவர் கூறியிருந்த சில ''அசிங்கிதமான'' விடயங்கள் பதிவில் இருப்பதாக ஜனாதிபதி அவருக்குக் கூறினார்.

ஆங்கிலப் பத்திரிகையொன்றின் செய்தியாளர் ஒருவர் வேறொரு கட்சியின் பேரில் அமைந்த 'சி டி எம் ஏ' ரெலிபோன் ஒன்றை - முன்னாள் பாதுகாப்பு பிரதம அதிகாரியால் பாவிக்கப்பட்டது - சம்பந்தப்பட்ட விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கொண்டுபோயுள்ளார். ஜெனரல் பொன்சேகா கூறியுள்ளவைகளைக் கேட்டபோது எனது கால்கள் நடுங்கத் தொடங்கிவிட்டன. உண்மையில் அவர் கூறிய அதிர்ச்சியளிக்கும் விடயங்களை நீங்கள் கேட்க வேண்டும் என்று தமது கட்சியினருக்கு அந்த உறுப்பினர் கூறியுள்ளார்.

## பொருத்தமான வேட்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரும்கூட இவ்வாறு நடக்கும் என்று நம்ப மறுத்திருந்தார்கள். எதிர்க்கட்சியினருடன் திரைமறைவில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்தன. பொன்சேகாவை விட வேறு எந்த ஒரு வேட்பாளரும் ராஜபக்ஷவுக்குப் பொருத்தமான எதிர் வேட்பாளராக அமையமாட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் உணர்ந்தார்கள். புலிகளை வெற்றி கொண்டதில் பொன்சேகாவுக்குத் தொடர்ந்தும் புகழ் இருந்து வந்தமையை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

எனவே எதிர்க்கட்சியினர் ஒன்றாகச் சேர்ந்து நின்று ஒன்றாகப் போட்டியிடுவதற்குப் பொன்சேகாவே பொருத்தமான பிரமுகராக - எல்லாரையும் இணைக்கும் கயிறாக செயல்படுவதற்குச் சரியானவர் என்று முடிவெடுக்கப்பட்டது.

எனவே போர் வீரர் பொது வேட்பாளராக நிறுத்தப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டார். ஆக ராஜபக்ஷ குடும்பத்தினரின் செயல்களை வெளிப்படுத்துவதற்கும் நிறைவேற்று அதிகாரம் மூலம் அவர்களுக்குப் பல்வேறு அதிகாரங்களும் கிடைத்து வருவதை ஒழிக்கும் வகையிலும் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு அவர் முன்வந்தார்.

இவ்வாறு அவர் சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டார். அவர் எடுத்துள்ள நிலைப்பாட்டின் மூலம் தம்மைத் தாமே வெளிப்படுத்திக் கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுவிட்டார். அவரது தொழில்துறை, தகுதிகள், மற்றும் பெருமை போன்றவை தொடர்பான பாரதூரமான கேள்விகள் எழுவதற்கும் இடம் அளித்துவிட்டார்.

விடுதலைப்புலிகள் எவரும் சரணடைய அனுமதிக்கப்படலாகாது; அவர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களநிலைத் தளபதி ஒருவருக்குக் கட்டளையிட்டிருந்தார் எனவும் போரின் இறுதிக்கட்ட செயற்பாடுகள் தொடர்பாக - குறிப்பாக மூன்று முக்கிய புலித் தலைவர்கள் (புலித்தேவன், நடேசன், மற்றும் ரமேஷ்) மூவர் சரணடைவதற்கு முன்வந்திருந்தது தொடர்பாக தமக்குத் தகவல் தரப்படவில்லையென்றும் பொன்சேகா கூறியிருந்தார். மேலும், இந்தத் தகவலை பஸில் ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வழங்கியிருந்தார், அவர் அது தொடர்பாக 58ஆவது படையணி யின் களநிலைத் தளபதி பிரிகேடியர் ஷவேந்திராவுடன் தொடர்பு கொண்டு புலிகள் எவருக்கும் சரணடையச் சந்தர்ப்பம் அளிக்கலாகாதெனவும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் எனவும் கட்டளையிட்டிருந்தார் எனக் கூறியிருந்தார்.

## போர் வீரர்களைக் காட்டிக் கொடுக்கும் செயல்

இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர், சரத்பொன்சேகாவின் அறிக்கை போர் வீரர்களைக் காட்டிக் கொடுப்பதாகவுள்ளது. தமது உயிர்களை போர்முனையில் தியாகம் செய்த வீரர்கள் அவர்கள் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியிருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் போர் வீரர்களை சர்வதேச போர் விசாரணை ஆணைக்குழு முன் நிறுத்துவதற்கு நடைபெறும் சதித்திட்டத்தின் ஓர் அம்சமாகவே பொன்சேகாவின் கூற்றுக்கள் விளங்குவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தில் அழைக்கப்பட்டிருந்த அவசர ஊடகக் கூட்டமொன்றில் இந்

## சரணடைய வந்த புலிகள் கொலை பற்றிய தகவல்கள் எழுப்பியுள்ள கேள்வி

தக் கருத்துக்களை அவர்கள் வெளியிட்டிருந்தனர். பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவும் சிரேஷ்ட பொலிஸ் பிரதி அதிபர் காமினி நவரத்தினவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கருத்துக்கள் அவசரத்தில் வெளியிடப்பட்டவை; ஆய்வுகள் நடத்தி வெளியிடப்பட்டவையன்று. ஆனால் சரணடைந்த புலிகள் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டமை தொடர்பாக இவர்கள் குறிப்பாக மறுப்பு எதனையும் வெளியிடவில்லை என்பது இந்த மறுப்புகளில் தென்பட்ட மிக முக்கிய குறைபாடாகும். இதனால் மேற்கூறிய குற்றச்சாட்டுகள் உண்மையானவையென்றே கருதப்படும் வகையில் அமைந்துவிட்டன. இது அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை.

## உத்தியோக பூர்வ இரகசியம் இது

இந்த மாநாட்டின் நோக்கம் இதில் சர்வதேச சதித்திட்டம் இருக்கிறது என்று காட்டுவதும் தொழில்சார் இரகசியப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் வேறு சட்டங்களின் கீழ் பொன்சேகாவின் மீது சட்டமா அதிபரால் நடவடிக்கை எடுக்கும்படி கோருவதற்காகவே என்று கருதப்படுகின்றது. ஓய்வுபெற்ற இராணுவத்தளபதி பொன்சேகா இப்போது உத்தியோகபூர்வ இரகசியம் ஒன்றை வெளியிட்டுவிட்டார் என்பதே குற்றச்சாட்டாகும்.

இது இப்போது கொழும்பில் குறிப்பாக ராஜதந்திர வட்டாரங்களில் சரணடைந்த புலித்தலைவர்கள் கொல்லப்பட்டமையானது உத்தியோகபூர்வ இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றது என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றது. அரசின் சட்ட நிபுணர்கள், சட்டமா அதிபர் திணைக்களம் உட்பட அனைவரும் இந்த விடயத்தை இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். அதேசமயம் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களை இந்த விடயத்தில் கவனமாய் இருக்கும்படியும், சம்பந்தப்பட்டுக்கொள்ளவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. சர்வதேச ஊடகங்கள் இதனைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தின் மீது சேறு பூசும் செயற்பாட்டை அதிகரித்து விடலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எதுவானாலும் ஜெனரல் பொன்சேகாவின் கருத்து இராணுவத்தில் மட்டுமன்றி, மக்கள் மத்தியிலும் கொந்தளிப்பைத் தோற்றுவித்துள்ளது. அவர் பதக்கங்கள் பெற்றுப் பாராட்டுப் பெற்ற அதிகாரி, இராணுவத்தில் உயர்ந்த தராதரங்களை அறிமுகப்படுத்தியவர் என்று தம்பட்டம் அடித்துக் கொண்ட ஒருவர் புலிகள் அமைப்பை இராணுவ ரீதியில் தோற்கடித்தமைக்கான சகல பெருமைகளுக்கும் உரியவராக கூறிக்கொள்பவர், தமது உயர் அதிகாரிகள், தனக்கு கீழ் உள்ள ஓர் அதிகாரி முழு நாட்டையும் காட்டிக் கொடுத்துள்ளார். இந்த அதிகாரி லெப்டினட் ஜெனரல் பொன்சேகாவிடமிருந்து கட்டளைகளைப் பெற்றுச் செயல்பட்டு இராணுவத்தை நடத்திச் சென்றுள்ளார். போர் முடிந்த கையோடு தம்மால் வழிநடத்தப்பட்ட இராணுவத்துக்கே 95 வீதம் போரின் இராணுவ வெற்றி உரித்தாகும் என்றும் கூறியிருக்கிறார்.

இப்பொழுது வேறுவிதமான கதையொன்றை அவர் வெளியிடுகின்றார். அவரை நம்புவதானால் இராணுவத்திற்கு வேறு நபர்களும் கட்டளைகளை விடுபவர்களாக இருந்துள்ளார்கள் என்று கருத வேண்டியிருக்கிறது. அது உண்மையானால், முழு வெற்றிக்கும் தாமே பொறுப்பு என்று அவர் எவ்வாறு கூறிக் கொள்ளமுடியும்?

## நானே பொறுப்பு

இது தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு ஆதரவான பௌத்த துறவிகள் குழுவொன்று பொன்சேகாவின் கொள்ளுப்பிட்டி வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவிருந்தார்கள். பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கு இது கவலையை அளித்துள்ளது. கும்பல்களை எதிர்கொள்ள நேர்ந்தால் அதன் விளைவுகள் மோசமாகிவிடும் என்பதால் கோட்டை எம்.பி ரவி கருணாரத்னவின் மாளிகை வீட்டுக்கு சரத் அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் அப்படிப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம் பெறவில்லை.

ஜெனரல் பொன்சேகா பின்னர் நடத்திய பத்திரிகையாளர் கூட்டமொன்றில் பின்வரும் அறிவித்தலை விடுத்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தகாலம் முழுமையிலும் இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்துக்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன். களநிலை அதிகாரிகள் எவரும் சட்டத்திற்கு மாறாக நடந்து கொள்ளவில்லை. அரசாங்கம் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் காட்டுகிறது. பத்திரிகைப் பேட்டியொன்றினை தவறாகத் திரிவுபடுத்திக் கூறுகின்றது என்று கூறியிருந்தார்.

பின்னர் அவர் மேலும் தெரிவிக்கையில் செய்தி சேகரிப்பதற்காக 58 படையணிக்குச் சென்றிருந்த ஒரு நிருபரிடமிருந்து அறிந்தேன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடமிருந்து அழைப்பு ஒன்று 58 ஆவது பிரிவுப் படையணித் தலைவர் ஷவேந்திர சில்வாவுக்கு வந்துள்ளது. சில புலித் தலைவர்கள் சரணடையப் போவது பற்றி அழைப்பொன்று வந்ததாகக் கூறியிருந்தார். ஆனால் இந்தச் செய்தி தவறானதா இல்லையா என்பதை அவர் உறுதிப்படுத்தினாரா இல்லையா என்பது பற்றி ஒன்றும் கூறவில்லை.

வெள்ளைக் கொடியுடன் வந்த புலிகளின் தலைவர்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றார்களா இல்லையா என்பதல்ல இப்போதுள்ள கேள்வி. அப்படியான ஒரு நிலைமை இருந்திருந்தால் அதுபற்றி முழு அளவிலான ஆய்வுகளின் மூலமே தீர்மானிக்கப்பட வேண்டும். பொன்சேகா பேட்டியின் போது கூறியவைகளை மறுக்காத நிலையில் அவை அரசாங்கத்தால் சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கள் என்று கூறுகிறார். அந்தப் பேட்டியில் அவர் கூறியவை தவறு என்றால், அவரேதான் அவைகளைச் சோடித்தவ ராவார். இது அவரால் கடந்த ஆறுமாதங்களில் மக்கள் மத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நம்பிக்கையை சிதறடித்துவிட மாட்டாதா என்பதே இப்போதுள்ள கேள்வி.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 07 | 22.12.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.இ.05.12 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | [illegible] |
| சுபநேரம்: | [illegible] |
| ராகுகாலம்: | 03.25-04.55 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 09 ★ 07 ★ 1937



மறைவு 21 ★ 12 ★ 1987

### அமரர் சீ.செல்லத்துரை

(முன்னாள் மேற்பார்வையாளர், யாழ் அரசினர் வைத்தியசாலை)

அன்புடனும் பாசத்துடனும் பார்த்துப் பார்த்து பண்புடனே
எமைவளர்த்தீர் ஆண்டவன் அருளிய வர மென்றிருந்தோம்
அப்பாவே! பாதியில் எமைப்பிரிக்க யார்செய்த சூழ்ச்சியோ!!!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

ஈஸ்வரி வாசம்,
உரும்பிராய் மேற்கு. (91670) மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

அராலியூர் சிற்பக்கலாநிதி **விஸ்வநாதர் தம்பிராசா**

எங்கள் முருகன் ஆலயத்தையும் அருகிலுள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தையும் அழகுற புதிதாக நிர்மாணித்த சிற்பக்கலாநிதி விஸ்வநாதர் தம்பிராசா அவர்களுக்கு எம் அஞ்சலிகள் உரித்தாகுக.

ஓம் சாந்தி.

ஆலயபரிபாலன சபையினர்,
முருகன் கோயில், சங்கரத்தை.
(சி/563920)

உ
சிவமயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 ★ 12 ★ 1976



மறைவு 21 ★ 11 ★ 2009

### திருமதி அருள்நேசன் கேமமாலினி

கடந்த 21.11.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல்கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (21.12.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


*இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

22/6, தாமரை வீதி,
வண்.மேற்கு,
யாழ்ப்பாணம். (916609) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை இராமச்சந்திரன்

(சாரதி, பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்)



சாவகச்சேரி, கற்குளி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராமச்சந்திரன் 19.12.2009 (சனிக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - பூமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஞானச்சந்திரன், யோகச்சந்திரன், உதயச்சந்திரன், செல்வச்சந்திரன், கவிதா, கோணேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.12.2009) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்குளி வடக்கு,*
*சாவகச்சேரி.* (91672) தகவல்: கா். ஞானச்சந்திரன் (சகோதரன்).

## வியாபார முகாமைத்துவ மாணி கற்கை நெறி

யாழ்.பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவமாணி இணைய வழிக்கற்கை நெறிக்கான பதிவுகளை நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட நூறு மாணவர்களின் பெயர்ப்பட்டியல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இம் மாணவர்கள் வெளிவாரிப் பதிவுகள் அலகிலோ அல்லது யாழ்.பல்கலைக்கழக இணையத்தள மூலமாகவோ (www.jfn.ac.lk) பதிவுக்கான படிவங்களைப் பெற்று நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தம்மைப் பதிவுசெய்துகொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜா கேட்டுள்ளார். (ஒ-1)

## வெங்காயச் செய்கையாளர் பெரிதும் பாதிப்பு

பண்டத்தரிப்பு, டிசெ.21

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மாதகல், சகாயபுரம், மாரீசன்கூடல், உயரப்புலம், இளவாலை, பெரியவிளான், அளவெட்டி போன்ற கிராமங்களைச் சேர்ந்த வெங்காயச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வெங்காயத்தின் சந்தை வாய்ப்பைக் கருத்தில் கொண்டு அதிகமான விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையில் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-130)

## இளைஞன் குளத்தில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

குளத்தில் குளிப்பதற்காகச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரி, கெருடாவிலில் வாகரைக் குளத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு தர்சன் (வயது - 21) என்பவரே மரணமானவர் ஆவார்.

இளைஞர்களுடன் கூட்டமாகச் சென்று குளத்தில் நீந்திக்கொண்டிருந்தவேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ஒ-10-131)

## 'சிரம வாசனா' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,டிசெ.21

தேசிய லொத்தர் சபையின் 'சிரம வாசனா' 208 ஆம் இலக்க நேற்றைய சீட்டி ழுப்பில் "F" என்ற ஆங்கில எழுத்தும், 08, 09, 11, 46 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. சீட்டின் நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட ரிக்கெட்டை உடைய ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்கள் சரியாக அமைந்த டிக்கெட்டுக்களை வைத்திருக்கும் 136 பேருக்கு 02 ஆம் பரிசாக ஆயிரம் ரூபா வீதம் கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் சரியாக அமைந்த டிக்கெட்டுக்களை வைத்திருக்கும் 5,610 பேருக்கு 03 ஆம் பரிசாக ஐம்பது ரூபா வீதம் கிடைக்கும். ஒரு இலக்கம் சரியான டிக்கெட்டுக்களை வைத்திருக்கும் 60,941 பேருக்கு 04 ஆம் பரிசாக இருபது ரூபா வீதம் வழங்கப்படும். (ஒ-10)


## மில் விற்பனைக்கு

10 H.P சுப்பர்மான் எஞ்சின் 1, ஈர அரிசி மெசின்(23)-1,கிறைண்டர்(10",12")-2, நெல் உடைக்கும் மெசின் -1, சைனா பொலிசர் (50)-1, 2"சாப்ற், தேவையான பெல்ற் இவற்றுடன் 10 Kg தராசு என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கண்ணன் மில்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்
T.P-0214902610, 0771532415

## தேவை

ROLEX, OMEGA கைக் கடிகாரங்களும் பொக்கற் மணிக் கூடுகளும் நல்ல விலைக்கு வாங்கப்படும். பழுதானவைகள் என்றாலும் பரவாயில்லை.

தொடர்பு: 0778062615


## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை
திருமதி பாமினி லலித் அவர்களின்
அன்புத் தந்தை

### க.மயூரகிரிநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யா/வடமராட்சி
இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### அமிர்தலிங்கம் மாசிலாமணி

(ஓய்வு பெற்ற மருந்தாளர் - நயினாதீவு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 35, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் மாசிலாமணி நேற்று (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற காமாட்சியின் (நெடுந்தீவு - மலையான்குளம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், வரதலட்சுமி, ஜெயலட்சுமி, இராசலெட்சுமி, வேதநாயகி, மருதையினார் (நியூசிலாந்து), புனிதவதி (லண்டன்), மகாலிங்கம் (ஜேர்மனி), திலகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் மற்றும் பழனிவேல், மகாதேவா, காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் இராஜேஸ்வரி (நியூசிலாந்து), சுரேந்திரநாதன் (லண்டன்), நேசமலர் (ஜேர்மனி),சிவநேசன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான பொன்னையா, தையலம்மை, தங்கம்மா, குட்டிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.35, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலில் இன்று (21.12.2009) திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 35, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில். (91674) தகவல்: ஆ.சி. பழனிவேல் (மைத்துனர்), திருமதி வேதநாயகி சாம்பசிவம் (சகோதரி).

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி மாலதி அரியானந்தம்
அவர்களின் அன்புத் தாய்

### அமரர் தயாமணி அழகரத்தினம்

(தயா ரீச்சர்)

அவர்களின் பிரிவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திய்டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் (91673)

## மரண அறிவித்தல்

### கந்தையா சபாரட்ணம்

(ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை)



சாவகச்சேரி, கிராம்புவில்லை பிறப்பிடமாகவும், வவுனியா, பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடா, Toronto வில் வசித்தவருமாகிய கந்தையா சபாரட்ணம் 19.12.2009 சனிக்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தையா(வெட்டுவடலி சாத்திரியார்)-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், விஜயலதா(கனடா), பிறேமலதா (அவுஸ்திரேலியா), சுரேஸ்குமார், ஜீவிர்லதா(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகணேஷன்(கனடா), தயாளன்(அவுஸ்திரேலியா), சர்மிளா, வசந்தராஜா(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலக்ஷி, பிரவீன், சகானா, சானியா, ஜிஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர், வட்டக்கச்சி), மகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற மாணிக்கம், அன்னம்மா(அளவெட்டி), காலஞ்சென்ற குணரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(22.12.2009) செவ்வாய்கிழமை OGDEN FUNERAL HOME இல் மாலை 5 மணி முதல் 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.12.2009 புதன் கிழமை மு.ப. 10 மணி முதல் 12 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-
கணேஷ்-லதா- 0014164023947(கனடா)
கண்ணன்-பிரேமா-0061397955628(அவுஸ்திரேலியா)
ஜீவிர்லதா-வசந்தன்-00442088979336(லண்டன்)
சுரேஸ்-சர்மிலா-0094775182055

தகவல்:- மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வவுனியா பஸ்களில் பயணிப்போரிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அறவிடுக!

## பயணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கு மிடையிலான ஏ-9 பாதை ஊடாக பயணிகள் பஸ் சேவையில் சுமுகமான நிலை ஏற்பட்டதன் பின்னரும்கூட நாடளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கு மிடையிலான பயணிகள் பஸ் சேவைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 138 ரூபா கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் பஸ்கள் வவுனியாவிலிருந்து மீண்டும் யாழ்.நோக்கி வரும்போது சில சமயம் பயணிகள் இன்றி வெறுமனே திரும்ப வேண்டியிருப்பதால் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்குமாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இத்தகைய நிலையினைக் கருத்திற் கொண்ட அரச அதிபர் விஷேட சலுகைக் கட்டணமாக பயணிகளிடம் 200 ரூபாவினை அறவிடுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இதன் பிரகாரம் 200 ரூபா கட்டணத்துடனே இதுவரை காலமும் யாழ்.வவுனியா பயணிகள் பஸ் சேவை இடம்பெற்று வருகின்றது. தற்போது ஏ-9 தரைப்பாதை ஊடாகப் போக்குவரத்து நடைமுறையில் தளர்வான நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதால் யாழ்.வவுனியாவுக்குமிடையிலான பஸ் சேவையில் பெருமளவான மக்கள் நாளாந்தம் பயணம் செய்து வருகின்றனர்.

அந்தப் பஸ்கள் யாழ்ப்பாணம் திரும்பி வரும் போது வவுனியாவில் இருந்து பெருமளவானோரை ஏற்றிக் கொண்டு வருகின்றன.

இந்த நிலையினைக் கருத்திற் கொண்டு பயணிகள் பஸ் கட்டணத்தை முன்னர் நிர்ணயிக்கப்பட்ட 138 ரூபாவாக அறவிடுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை தற்போது தனியார் மினி பஸ் சேவையினை கடந்த வியாழக்கிழமை முதல் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு தனியார் மூலமும் பயணிகள் சேவை இடம்பெற்று வருகிறது.

தனியார் மினிபஸ்களும் அதே 200 ரூபா கட்டணத்தையே அறவிடுகின்றனர். எனவே பயணிகள் நலனைக் கருத்திற் கொண்டு துறைசார் அதிகாரிகள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பயணிகள் எதிர்பார்க்கின்றனர். (04-9)

# கடும்மழை காரணமாக நிலத்தில் புதையும் கனரக வாகனங்கள்




யாழ்ப்பாணம்.டிசெ.21

அண்மையில் பெய்துவரும் கடும் மழையை அடுத்து கொழும்பில் இருந்து இங்கு வரும் கனரக வாகனங்கள் பலவும் ஏ9 வீதியின் பல இடங்களில் நிலத்தில் புதையுண்டு நிற்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பெரும் பாரங்களுடன் வரும் இவ்வாறான வாகனங்கள் ஏனைய வாகனங்களுக்கு வழிவிட முற்படும் வேளைகளிலும், ஏனைய வாகனங்களை முந்தும் வேளைகளிலும் இவ்வாறு வீதியின் ஓரங்களில் புதைகின்றன. இதனால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் பயணம் மேற்கொள்வோர் இவ்வாறான விபத்துக்களில் அகப்பட்டுக் கொள்ளும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளதனால் பெரிய கனரக வாகனங்கள் வீதிகளில் பயணம் செய்யும் வேளைகளில் இவர்கள் தமது போக்குவரத்தை நிறுத்துவது நல்லது எனவும் கூறப்படுகின்றது.

கடந்த வாரத்தில் யாழ்.பிரதம தபாலகதிற்கு அருகிலும், நாவற்குழி சந்தியிலும், நாவற்குழி உணவுக்களஞ்சியம் அருகிலும் இவ்வாறு கனரக வாகனங்கள் புதையுண்டது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.(04-288)

# மீளக்குடியேறி, தென்மராட்சி வலயத்தில் கடமையாற்றும் ஒருதொகுதி ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள்

யாழ்ப்பாணம்.டிசெ.21

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி தற்போது தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கான சம்பள நிலுவைகள் இன்று திங்கட்கிழமை மேற்படி வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

கீழே பெயர் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

**முல்லைத்தீவு வலயம்**

திருமதி ஜே.பெனடிற் அமலதாஸ், திருமதி ரி.சிறிஸ்கந்தராஜன் திருமதி ஆர்.தனபாலசிங்கம், திருமதி ரி.குவிதாசன், திருமதி எம்.செல்வகரன், திருமதி எஸ்.மதியராணி, திருமதி ஜ.குணசீலன்.

**துணுக்காய் வலயம்**

திருமதி கே.உதயபவான், திருமதி வீ.சிவகுமார், செல்வி என்.நவலட்சுமி, கே.வேலாயுதநாதன், திருமதி பி.ரஜனி, திருமதி ஜே.வாமதேவன், என்.கமலேஸ்வரன், வீ.கணேசலிங்கம், திருமதி எஸ்.சர்வேஸ்வரன், திருமதி டி.காந்தரூபன், கே.சத்தியசீலன், திருமதி எஸ்.சுபத்திராதேவி.

**கிளிநொச்சி வலயம்**

திருமதி எம்.ஜீ.ர.ஜெயந்திரன், எஸ். உதயபவான், திருமதி சி.ஞானச்சந்திரன், ஆ. ரஜனிகாந், திருமதி ஜீ.கேதீஸ்வரன், திருமதி கே.பவனீதராசா, திருமதி என்.அகிலாண்டேஸ்வரி, திருமதி கே.மஞ்சுளா, எஸ். சிவானவழன், திருமதி.எஸ். நடேசப்பிள்ளை, திருமதி. எஸ்.சிவனவழன், எஸ்.கதிர்மகன், செல்வி எஸ்.மனோரஞ்சிதா, திருமதி எம்.சாருலதா, எஸ்.பரணீதரன், ரி.அபரஜிதன், வி.பிரபாகரன், திருமதி எஸ்.சிவயிகதாசன், ரி.சிவரூபன், திருமதி ஆர்.லோகேந்திரன், திருமதி ஆர்.முரளிதரன், ஜ.கேசவன், திருமதி எஸ்.சிறிபதி, கே.அருளானந்தகுமார். (04-207)

# கால்நடை வளர்ப்போர் கூ.சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் மடத்தில் அமைந்துள்ள சங்க அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து கொள்வார். இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (04-201)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.21

ஆசிரிய உதவியாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனக் கடிதத்தின் பிரதியை வழங்கியவர்கள் மற்றும் வழங்காதவர்கள் ஆகியோர் தொடர்பில் மேற்படி சங்கம் முடிவுகளை எடுக்க வுள்ளதால் அனைவரையும் சமுகம் அளிக்குமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (04-201)

# ஈழத்தில் சைவப் பாரம்பரியத்தை காத்த பெருமை நாவலரையே சாரும்

## அறநெறி மன்றக் குருபூசை விழாவில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்.டிசெ.21

ஈழத்தின் சைவப் பாரம்பரியத்தை பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் காத்த பெருமை நல்லைநகர் ஆறுமுக நாவலரைச் சேரும்:

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தினரால் நடத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்தில் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்தில் நமது சைவசமயத்திற்கும் கலை, கலாசார விழிமியங்களுக்கும் பல்வேறு இடர்பாடுகள் வந்துள்ளன. இந்நிலையில் நாவலர் சைவப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து நிலை நிறுத்தியதால் நாம் இன்று உண்மைச் சைவர்களாக மிளிர்ந்து கொண்டிருக்கிறோம்.

நாவலர் பெருமான் செய்த அத்தகைய பெருங்கைங்கரியத்தால்தான் அவருக்குத் திருவாடுதுறை ஆதீனம் நாவலர் என்றவொரு சிறப்புப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது - என்றார்.

நிகழ்வில் வாழ்த்துரையினை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் தனதுரையில்-

சைவமும் தமிழும் தளைத்தோங்கப் பெரும்பாடுபட்டவர் நாவலர். அதற்காகத் திண்ணைப் பள்ளிக் கூடங்களை அமைத்துத் தாமும் ஆசிரியராகக் கடமை புரிந்து அறப்பணியாற்றினார்.

நாவலரது ஆன்மீக வாழ்வு, சமூகப்பணி சார்வாழ்வு என்பன எமது வாழ்வுக்கு அத்திபாரமாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வில் நாவலர் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி மனோன்மணி தனவீரசிங்கமும் உரையாற்றினார்.

நிகழ்வின் இறுதியில் வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தினரால் நாவலர் குருபூசை தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (04-9)

# கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயத்தில் நீண்ட காலத்தின் பின்னர் வழிபாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயத்தில் நீண்ட காலங்களின் பின்னர் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்திற்குச் சென்று வழிபடுவதற்கான வீதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்பின்னர் தற்போது ஆலயப்பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் திருவெம்பாவைப் பூசையை இந்த ஆலயத்தில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (04-224)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய ஒளிவிழா நிகழ்வு சங்கக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் சங்கத் தலைவர் கே.தெய்வேந்திரன் தலைமையுரையாற்றுவதை முதல் படத்திலும் சங்க இயக்குநர்களான [illegible] பிதா நேசராஜா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் கிறிஸ்மஸ் தாத்தாவின் நடன நிகழ்வை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையில் நேற்று நடைபெற்ற மாணவர்களைக் கௌரவித்தல், இரத்ததானம்வழங்கல், மூக்குகண்ணாடி வழங்கல், அடிக்கல் நடுதல் ஆகிய நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வுகளில் கடந்த 2008 மற்றும் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ. த விக்னராஜா மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

செஞ்சிலுவை சங்கத்தின் அவுஸ்திரேலியாப் பிரிவால் 17 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மருத்துவ அதிகாரிகளின் விடுதிக்கான அத்திவார அடிக்கல்லை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகசபைத் தலைவர் ஆறு திருமுருகன் நடுவதை இரண்டாவது படத்திலும் குடும்பஸ்தர் ஒருவர் இரத்ததானம் செய்வதை மூன்றாவது படத்திலும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பார்வையற்ற ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி அணிவிப்பதை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11 ★ 09 ★ 1973



உதிர்வு
21 ★ 12 ★ 2008

### திருமதி கல்பனா சுகந்தன்

திதி:08.01.2010

நேசத்துக்கு இலக்கணமாய் இருந்து எம்மை
நீங்காத துயருக்குள் விட்டுச் சென்றாய்
பாசத்துக் குரித்தான நீயும் - ஏகிப்
பறந்தாலும் ஓராண்டு எங்கள் நெஞ்சு
ஆசனத்தில் ஒளிர்கிறாய் - என்றும் நாங்கள்
அனு தினமும் நின் ஆத்ம சாந்திக்காய்
ஈசனாரை இறைஞ்சுகிறோம் ஞாலம் உள்ள
காலம்வரை நீயெங்கள் நினைவில் நிற்பாய்.

அன்புக் கணவர்: சுகந்தன்,
பிள்ளைகள்: சந்தோஷ், சௌமியா
மற்றும் உறவினர்களுடன் நண்பர்கள்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து கேபிள் ரீ.வி உரிமையாளர்கள் சமூக சேவைகள் மற்றும்சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கேபிள் ரீ.வி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் இக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. (1)

## இரண்டாம்ஆண்டு நினைவலைகள்



திருமதி
### சோமசுந்தரம் காந்தம்மா
(பழைய பஸ் கொம்பனியடி, வேலணை மேற்கு)

தோற்றம்
05.06.1922

மறைவு
13.01.2008

திதி: பஞ்சமி (21.12.2009)

என்றும் நீங்கா நினைவலைகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

82, பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு. (91662)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
16 ★ 12 ★ 1943



விண்ணில்
22 ★ 11 ★ 2009

### அமரர் செல்லத்துரை சிவநாதன்

22.11.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் இன்று (21.12.2009) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இராசரத்தினம் குடும்பம்
சாம்பசிவம் குடும்பம்
சிவபாதசுந்தரம் குடும்பம் } (அவுஸ்திரேலியா)
சிவானந்தம் குடும்பம்
சத்தியமூர்த்தி குடும்பம்

சுந்தரலிங்கம் குடும்பம்
சுகுமார் குடும்பம்
சுதாகரன் குடும்பம் } (அவுஸ்திரேலியா)
குணநாயகம் குடும்பம்
அமுதலிங்கம் குடும்பம்
இராசநாயகம் குடும்பம்

பிள்ளைகள்,
நிருபா, நிரஞ்சன், நிரஞ்சலா, மருமகன்
கிரிதரன், பேரப்பிள்ளைகள்.

62/4, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (91666)

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய்க் கிராமத்தின் சமூகசேவையாளர், சிறந்த கூட்டுறவாளர், ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான், சமூக சேவா சங்கத் தலைவர், அந்தியகால சேவை சபை போஷகர், ஸ்ரார் விளையாட்டுக்கழகம், கண்ணகை அம்மன் கோயில் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகர், வட கோவை கண்ணகை அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீசித்திர வேலவர் தேவஸ்தானம், ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம், வைத்தியசாலை அபிவிருத்திச்சபை, கிராமஅபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் இயக்குநர் சபை தலைவரும், உறுப்பினரும், மகிழடி உக்கிர வைரவர் தேவஸ்தான பரிபாலனசபை போஷகர், தமிழ் ஆசிரியர்சங்க முன்னாள் செயலாளரும், இந்து சமய பேரவை உப தலைவரும், சிறந்த எழுத்தாளனுமாகிய

கோவை கிளார் உயர்திரு
### க.இ.குமாரசாமி உபாத்தியாயர்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதி, அந்திய கால சேவை சபை, கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலனசபை, ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி கோயில் பரிபாலனசபை, அடுப்பந்தாளி வைரவர் கோயில் பரிபாலனசபை, மகிழடி உக்கிர வைரவர் தேவஸ்தான பரிபாலனசபை, விவசாய சம்மேளனம், வைத்தியசாலை அபிவிருத்திச்சபை, சுருட்டுத் தொழிலாளர் சிக்கன கடன் வழங்கும் சங்கம், ஸ்ரார் விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம்,கண்ணகை அம்பாள் சனசமூக நிலையம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம். (91668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுரிமைச் சொத்துக்களைக் காக்கும் நடவடிக்கைகளில் பயனுள்ள ஒன்றாக அமைந்த இருநாள் பயிலரங்கு

## ஒரு அனுபவப் பகிர்வு

கே.ரி. கணேசலிங்கம்
தலைவர்,சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

'மரபுரிமைச் சொத்துக்களின் முகாமை தொடர்பான பயிலரங்கு ஒன்று கடந்த 12,13 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை, சமூகவியல்துறை ஆகியன யாழ்ப்பாண செயலகத்துடன் இணைந்து இப்பயிலரங்கை ஏற்பாடு செய்திருந்தன. இதில் முதல் நாள் நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தலைமையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனின் சிறப்புரையுடனும் நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி என். கிருஷ்ணவேணி, சமூகவியல்துறைத் தலைவர் கே.ரீ.கணேசலிங்கம் ஆகியோரின் தொடக்க உரையுடனும் ஆரம்பமானது.

இதில் உரையாற்றிய எல்லோருமே மரபுரிமைச் சொத்துக்களைப் பேணுவதன் அவசியத்தினை உணர்த்தியதுடன் அதற்கான அறிவையும், நுட்பத்தினையும் எப்படி உருவாக்குவதென்பதற்கான விரிவுரைகளை நோக்குதல் அடிப்படை பயிலரங்கின் தேவையாகுமென குறிப்பிட்டனர். அதற்கான விரிவுரைகளை எட்டுத்தலைப்புகளில் கீழ் முன்வைப்பதென நிகழ்ச்சித்திட்டம் அமைந்திருந்தது.

முதலாவது விரிவுரையை சமூவியல் துறை விரிவுரையாளர் எஸ். சிறிக்காந்தன் முன்வைத்தார். அதன் பிரதான பகுதி பண்பாட்டுக்கு அறிமுகம் தருவதாகவும் அதன் பரப்பெல்லையை மரபுரிமை சொத்துக்களுக்குரித்தாகப் பார்ப்பதையும் அடியொற்றி அமைந்திருந்தது. அவ்வகைப் பண்பாட்டுக் கூறுகளில் தமிழர் மத்தியில் எஞ்சியுள்ள தடங்களையும் பதிவுகளையும் பண்பாட்டு உரு மாற்றத்தினூடாக அழியவிடாது தடுப்பது அவசியமெனக் குறிப்பிட்டார். மேலும் பண்பாட்டுத் தேக்கம் தரக்கூடிய நெருக்குவாரங்களையும் முன்மொழிந்து முதல் அமர்வின் முதல் விரிவுரை




கலந்துரையாடலுக்காக ஒப்புவிக்கப்பட்டது. கலந்துரையாடல் குறிப்பிட்ட நேரம் பண்பாட்டின் நியமங்களையும் அதன் தேக்க நிலைப் பதிவுகளையும் பற்றியதாக அமைந்தது.

அடுத்து சமூகவியல் துறை விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணா 'மரபுரிமைக் கற்கையும் முகாமைத்துவமும்' என்ற தலைப்பில் தமிழர் பண்பாட்டு மரபுகளுக்குள் மரபுரிமைக் கற்கை கொண்டிருக்கும்/ கொண்டிருக்க வேண்டிய அம்சங்களைக் கலந்துரையாடல் மூலம் விவரித்தார். அவரது ஆய்வு நீண்ட உரையாடலுக்கு களம் அமைத்ததுடன் தமிழர் சார்பில் ஏற்பட்ட தவறுகளும், மீட்டெடுக்கும் பொறுப்பாண்மையும் விவரிக்கப் பட்டது. இதனால் ஏற்படப்போகும் புதிய மரபுகளை மீளமுடியாத எல்லைக்குள் கொண்டு செல்லக்கூடிய சாதி/ மதக் கட்டமைப்பின் பலவீனங்கள் மற்றும் அசிரத்தையான மனோநிலை, காத்திரமற்ற கடமைப்பாடுகள் என்பவற்றை மிக சுவாரசியமாக விவரித்தார். இதன் மூலம் தேடலும் அதற்கான தேவைப்பாட்டையும் உணர்த்தினார்.

இவரது உரையின் நீண்ட கலந்துரையாடல் தமிழ் சமூகத்தின் மரபுரிமை மீட்புக்கான திட்டமிடலை வரைய ஆரம்பித்தது. அவ்வகை திட்டமிடல் வெறுமனவே கோட்பாட்டின் வழி அல்லாது களப்பணியினூடாக சாத்தியப்படுமென உணரப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், கலாசார உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர் அகிலன், ஜெயதீஸ் போன்றோரின் கருத்துக்களுடன் முதலாவது அமர்வு நிறைவு பெற்றது.

இரண்டாவது அமர்வு நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலனின் ''மரபுரிமைச் சொத்துக்களை ஆராய்தலும் ஆவணப்படுத்தலும்'' என்னும் தலைப்பில் நிகழ்ந்தது. யாழ்ப்பாண சமூகத்திடம் உள்ள மரபுரிமைப் பொருள்கள் பற்றிய காட்சிப்படுத்தலுடன் திட்டவரைபுகளை முதன்மைப்படுத்தி களப்பணிக்கான கட்டமைப்பையும் அவர் வரைந்தார். இதனால் மரபுரிமைச் சொத்துக்களின் பேணுகைக்கான செயலமர்வில் பங்கு பற்றிய பிரிவினரின் பணி முதன்மைப்படுத்தப்பட்டது. அதனை மேற்கொள்வதற்கான நுட்பங்களை இனங்காட்டும் வரைபுகளை வெளிப்படுத்தியதுடன் எவ்வகை அணுகு முறையினூடாக மேற்கொள்வதென்ற விடயமும் அதற்கு உபாயங்களும் முன்வைக்கப்பட்டன.

உணர்வு சார்ந்து, எண்ணம் சார்ந்து, சிந்தனை மரபில் ஏற்பட வேண்டிய அம்சம் சார்ந்தும் அகிலனின் விரிவுரை அமைந்திருந்தது. அவரது கருத்துரை தெளிவான கலந்துரையாடலாக கலாசார உத்தியோகத்தர் சார்பில் எழுந்தது.

இரண்டாவது அமர்வின் இரண்டாவது விரிவுரை ஜே. ஜெயதீசனால் ''மரபுரிமைச் சொத்துக்களை பேணுகைக்கும் பதனப்படுத்தலுக்குமான அடிப்படைகள்'' என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டது. எவ்வகை அடிப்படைக்கு ஊடாக மரபுரிமைச் சொத்துக்களைப் பேணமுடியும் என்ற பண்பாட்டுத் தன்மைக்குள்ளும் பிற தேசங்களில் பின்பற்றப்படும் அணுகு முறைகளையும் அவர் விவரித்தார். அதனுடன் பேணுகைக்கான அறிவுசார்ந்த, எண்ணம் சார்ந்த விழிப்புணர்வை உருவாக்கும் அம்சங்கள் வெளிக்கொணரப்பட்டது. இதனால் ஒரு அறிக்கையும் அமுலாக்கத்திற்கான தந்திரோபாயமும் முன்மொழியப்பட்டது. அவரது உரையை அடுத்து கலந்துரையாடல் நிகழ்ந்தது. அதில் கணிசமான பிரதிபலிப்புக்கள், நடைமுறைசார் விடயங்கள் சார்ந்து முன் வைக்கப்பட்டன.

இரண்டாம் நாள் அமர்வுகளின் சிறப்புரை பதில் கலைப்பீடாதிபதியும் பேராசிரியருமான எஸ். சிவலிங்கராசாவின் ''யாழ்ப்பாணப்பண்பாடு மறந்தவற்றையும், மறைந்தவற்றையும்'' பற்றியதாக அமைந்தது. பின்னர் 'சட்டத்தினால் மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாத்தல்' என்ற தலைப்பில் சட்டத்துறைவிரிவுரையாளர் செல்வி. ம. கோசலை உரையாற்றினார். உலக மட்டத்திலும், இலங்கையிலும் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் பற்றிய முழுமையை வெளிப்படுத்தினார். சர்வதேச சட்டத்தின் முன்மொழிவுகளையும் இலங்கைச் சட்டத்தின் தனித்து வங்களையும் வெளிக்கொணர்ந்ததுடன் மத்திய, மாகாண உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள சட்ட வல்லமைகளை மிக சுவாரசியமாக பயிலரங்கு பயனாளிகளுக்கு முன் வைத்தார். கலந்துரையாடல், கேள்வி-பதில்மாதிரிக்குள்ளால் விரிவுரையை ஒழுங்குபடுத்தியதுடன் சட்ட வல்லமைகளின் பங்கு மரபுரிமை சொத்துக்களை பேணுவதில் எவ்வளவு தூரம் முக்கியமானதென்பதை விளக்கினார். இவரது விரிவுரையை அடுத்து நீண்ட கலந்துரையாடல் நிகழ்ந்தது. இரண்டாம் நாள் அமர்வு முழுவதும் அரசாங்க அதிபர் பங்கேற்றதால் இலங்கை அரசாங்கத்தின் எல்லையும் மாவட்ட செயலகத்தின் எல்லையும் தெளிவாக வெளிவந்ததுடன் அவற்றினூடாக மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைப்புகள் மரபுரிமை சார்ந்து எவ்வாறான வலிமைகளைக் கொண்டிருக் கின்றன/ கொண்டிருக்க முடியுமென்ற விடயம் தெரியவந்தது. தேசவழமையின் பங்கினையும் பயிலரங்கில் உறுப்பினர்கள் அறிய முயன்றதுடன் அதன் திருத்தம் மரபுரிமைச் சொத்துக்களை பேணுவதாகவும் அதற்கான மனோநிலையை வளர்ப்பதாகவும் அமைதல் அவசியமானதென முன்மொழியப்பட்டது.

இவ்வமர்வின் பண்பாட்டு இடங்கள் புனரமைப்புக்கள்'', புதிய கட்டுமானங்கள், சில கருத்துக்கள் என்ற தலைப்பில் பா. அகிலனின் உரை அமைந்தது. அதில் இன்றைய சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், புனரமைப்புக்கள் செய்வதன் பெயராலும் புதிய கட்டுமானம் என்ற பெயராலும் எப்படி அழிவடைகிறது என்பதை விவரித்தார். அதிலிருந்து முதுசொம்களை பாதுகாப்பதற்காக அவசியம் உணர்த்தப்பட்டதுடன் தனித்துவமான மரபு சார்ந்த வாழ்விடங்கள் காணாமல் போகின்றமை தடுக்கப்படுவதுடன் குறைந்த பட்சம் அவற்றை ஆவணவடிவில் பாதுகாக்க முயற்சிப்பது அவசியம் எனக் குறிப்பிட்டார். அவரது பதிவு மரபுரிமைச் சொத்துக்களை நிரந்தரமாகப் பராமரிப்பது பற்றிய கேள்விகளை முன்வைத்தது. அதற்காக அரச மட்டத்திலும், அரசியல் [illegible]யும் உருவாக்குவதற்கான ஊக்குவிப்பினை வெளிப்படுத்தினார்.

அதனை அடுத்து 'பண்பாட்டு அபிவிருத்தி நோக்கில் அரும்பொருளகங்களும், பண்பாட்டுச் சுற்றுலாவும், என்ற தலைப்பில் ஒரு நீண்ட உரையை ஜெயதீஸ் முன்வைத்தார். அவரது உரை சுற்றுலா ஊடாக அரும் பொருளகங்களின் முக்கியத்துவத்தினை குறிப்பிட்டதுடன் அதன் கருத்தியல் பரிமாணம் வெறும் பழைய மரபுசார் பொருள்களின் காட்சிப்படுத்தலாலே அரும்பொருளகங்கள் என்ற கருத்தின் பலவீனத்தை முழுமையாக நிறுவமுயன்றார்.

கற்றல், அனுபவம், அறிக்கை, மானிடம், புரிதல், உணர்தல்

என்'ற பாரிய அறிவியலுக்கான களங்களாகத் தற்போதைய அருபொருளகங்கள் காணப்படுகின்றன என்பது விரிவுகளைச் சார்ந்தும், காட்சிப்படுத்தல் சார்ந்தும் முன்வைத்தார். அவரது காட்சிப்படுத்தல், உலகம் முழுவதையும் சுற்றிவந்ததுடன் அரும்பொருளகத்தின் எண்ணக்கருவாக்கத்தை நம்மவர் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் உணர்த்தியது.

இறுதியாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் 'யாழ்ப்பாண மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதிலுள்ள பிரச்சினைகள்' என்ற தலைப்பில் நிர்வாகத்திற்குரித்தான பாணியில் கருத்துரை வழங்கினார். அவரது உரையின் முக்கியமாக மாகாண, உள்ளூராட்சி அமைப்புக்களின் பொறுப்பாண்மை பற்றி குறிப்பிட்டிருந்தார். மேலும் அவ்வகை நிர்வாக அலகுகள் மேற்கொள்ளக் கூடிய அல்லது மேற்கொள்ள 'வேண்டிய விடயங்களை உணர்த்தியதுடன் தெளிவான ஒரு திட்டமிடலும் அவரால் முன்வைக்கப்பட்டது.

அதன்படி மாகாண- உள்ளூராட்சி நிர்வாகப் பிரிவுகளும் ஆளுநர், முதலமைச்சர், மாநகரசபை முதல்வர் ஆகியோரின் ஒத்துழைப்பு எதிர்காலத்தில் எட்டக்கூடியதாக இருப்பதுடன் அவர்களின் தற்றுணிவு கணிசமான பிரச்சினைகளை தீர்க்குமென குறிப்பிட்டார். சாதாரணமக்கள் அதில் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட வேண்டும். மற்றும் நிறுவனங்கள் குறிப்பாக கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் தமது பொறுப்புக் குரித்தான பணிகளைச் செய்வதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இதில் அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் மரபுரிமைச் சொத்துக்களின் மகிமையை மதித்து முன்னுரிமை கொடுப்பது சிறப்பானதெனக் குறிப்பிட்டார்.

அவரது உரையில் ஆவணப்படுத்தல் பிரதேச மட்டத்திலும்,மாவட்ட மட்டத்திலும் மேற்தொள்ள திட்டமிடுவதுடன் ஆலோசனை சபையொன்றும் 'அமைப்பதெனவும் குறிப்பிட்டார். அவ்வகையில் தனிப்பட்ட வெளிநாட்டவர்களின் பங்களிப்பினை ஏற்கும் அதே வேளை அவர்களின் பொறுப்பும், தேவைப்பாடும் அவசியமானதெனத் தெரியப் படுத்தினார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிமனை ஒவ்வொரு கலாசார உத்தியோகத் தருக்கும் படப்பிடிப்பு கருவி ஒன்றினை (Digital camara) வழங்குவதெனவும் அவை ஆவணப்படுத்தலுக்கான ஆரம்ப ஊக்கியென்றும் அதனை விரைவில் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். பிரதேச ரீதியில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் வாரியாக அரும்பொருள் காட்சியகம் அமைப்பதென்றும் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் தெளிவுபடுத்தினார்.

இதனை ஏற்றுக் கொண்ட சபை உறுப்பினர்கள், 2010 ஆம் ஆண்டை அது வளப்படுத்தலுக்குரிய ஆண்டாக பிரகடனப்படுத்தி செயற்படுவதாகவும் உறுதியெடுத்துக் கொண்டதுடன் இந்தப் பயிலரங்கு நிறைவுற்றது.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் களஞ்சியம் & மது பாண்சி

கிறிஸ்மஸ், வருடப்பிறப்பு, தைப்பொங்கலை முன்னிட்டு மலிவு விலையில்...

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

* பாண்சிப் பொருள்கள்
* விளையாட்டுப் பொருள்கள்
* பிளாஸ்டிக் பொருள்கள்
* கதிரை வகைகள்
* பாடசாலை உபகரணங்கள் (கொப்பி வகைகள்)

மற்றும்

* உணவுப் பொருள்கள்
* கேக் தயாரிப்பதற்கான பொருள்கள்
* பால்மா, பிஸ்கட் வகைகள்
* மாட்டுத்தீன் வகைகள் (பிறிமா)
* கோழித்தீன் வகைகள் (பிறிமா)

போன்ற அனைத்துப் பொருள்களையும் சிறந்த விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

## பிள்ளையார் களஞ்சியம் & மது பாண்சி

யாழ்.வீதி, மானிப்பாய். தொ.பே: 021 222 7543

யாழ்-கொழும்பு-வவுனியா போன்ற இடங்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து தரப்படும்.
(வீடுகளுக்கு வந்து ஏற்றி-செல்ல வேண்டிய இடத்தில் இறக்கப்படும்).


## மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் -2009

* 23.12.2009 புதன்கிழமை பகல் வெள்ளி இடப வாகனம், கொடியேற்றம். இரவு பூதவாகனம்.
* 31.12.2009 வியாழக்கிழமை பகல் (10மணிக்கு) தேர், இரவு இடபவாகனம்
* 01.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் (10மணிக்கு) தீர்த்தோற்சவம், வெள்ளி இடபவாகனம், மாலை ஊஞ்சல், (4 மணிக்கு) தம்ப பூசை மகா ஆசீர்வாதம், கொடியிறக்கம், சண்டேசுவரி உற்சவம், ஆசாரிய உற்சவம்.

(91597)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னையா வல்லிபுரம்

(சுன்னாகம் தெற்கு)

தோற்றம் 13.12.1927

மறைவு 01.01.2009

திதி: மார்கழி பஞ்சமி (21.12.2009)

குடும்பத்தின் குலவிளக்காய் என்றும் எம்மோடு
நிலைபெற்ற நீர் எமைப்பிரிந்து ஆண்டொன்று
ஆனதுவோ?இன்பவாழ்வு நாம் வாழ எமக்கு இனியவை
பல செய்தீர் கலங்கரை விளக்காய்
உம்மை நினைத்தே நாமிங்கு வாழ்கின்றோம்
உத்தமரே பெற்றிடுக சாந்தி! சாந்தி! சாந்தி!

கைதடி கிழக்கு,
கைதடி.

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

(91589)


வீட்டுக்கு மற்றும் ஹோட்டலுக்கு

டயிடஸ் ஸ்ரோஸ்
2439422



## SATS-TECH ENGINEERS

* மாதகட்டணம் ரூ. 400/= இருந்து
* பக்கேஜ்களுக்கான கட்டணங்கள் செலுத்திக் கொள்ளலாம்.
* தேவைக்கேற்ப தெரிவு

Rs.8000/= ONWORDS

XMAS NEW YEAR OFFER

SPORTS NEWS MOVIES MUSIC

No: 300 KKS Road Jaffna.
Phone:- 021 2228812 / 222 4559
0217210228


## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்திலும் பின்னர் இரணைமடு, கிளிநொச்சியிலும் வசித்துவந்த மயில்வாகனம் வசந்தராஜா என்பவரை அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரையாவது கனடாவில் வசிக்கும் கந்தையா ரஜீந்திரன் என்பவர் தொடர்பு கொள்ள விரும்புகிறார்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0014252562100

(92955)

## சரவிழிகளுடன் 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 ★ 06 ★ 1935

மறைவு 21 ★ 12 ★ 2002

### அமரர் மரியாம்பிள்ளை வைற்றஸ்

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர்-தாழையடி)

குடும்பத்தின் சிறந்த தலைவனாய்
கண்ணியம் மிக்க சீலனாய்
உற்றாரும் மற்றோரும் போற்ற
உயர்ந்து வாழ்ந்த உத்தமனே!
ஆண்டுகள் ஏழு மறைந்தாலும்
ஆறாதையா எம் துயர்
இறையருள்பால் இளைப்பாற
இறையாசி வேண்டுகின்றோம்

போயிட்டி,
இளவாலை.

மனைவி, மகன் குடும்பம்
தகவல்:- ஜெபா-(சுவிஸ்).

(91459)

## மஹாஜன சம்பத அலுவலக முடிவுகள்

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

18.12.2009

சீட்டிழுப்பு இல. 2190

வெற்றி எழுத்து: Y
வெற்றி எண்கள்: 3 9 3 5 3 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 3 9 3 5 3 5 | ரூபா.10,435,947/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 3 9 3 5 3 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | 9 3 5 3 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | 3 5 3 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 147 |
| 4 பரிசுகள் | | 5 3 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1463 |
| 5 பரிசுகள் | | 3 5 | ரூபா. 100/= | பரிசுகள் 14302 |
| 6 பரிசுகள் | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 142217 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 3 9 3 5 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | | 3 9 3 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 143 |
| 9 பரிசுகள் | | 3 9 3 | ரூபா. 100/= | பரிசுகள் 1455 |
| 10 பரிசுகள் | | 3 9 | ரூபா. 50/= | பரிசுகள் 14288 |
| 11 பரிசுகள் | Y | | ரூபா. 20/= | பரிசுகள் 56866 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 15,007,760.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 10,752,908.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline 2433...

## முன்பள்ளியின் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள மக்கள் பணிமனை நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மக்கள் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை உறுப்பினரும் மக்கள் பணிமனைத் தலைவருமான அஷ்ஷெயிக் ப.ஏ.எஸ். சுபியான் கலந்துகொள்வார்.

இதில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (03-201)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1149 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 21 25 37 51

18-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 8,172,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 216,013 | 20/- | 4,320,260/- |
| 2 இலக்கங்கள் | 19,583 | 40/- | 783,320/- |
| 1 இல. + லக்கினம் | 19,642 | 60/- | 1,178,520/- |
| 2 இல. + லக்கினம் | 1,754 | 200/- | 350,800/- |
| 3 இலக்கங்கள் | 516 | 1000/- | 516,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,172,975/- | - |
| மொத்தம் | | | 8,178,900/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,559 | | 8,678,900/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,659,750/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : டபிள்யு.டீ.ஷெரீனா குலதுங்க மிஹுவாங்கொடை
கைத்தொலைபேசி வெற்றியாளர்: எல்.டீ.மிலின விஷ்வஜித் மீகஹதென்ன

2009 டிசெம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 500810841-3-33 |
| களுத்துறை | 500804719-7-03 |
| மாத்தளை | 500806904-1-18 |
| கண்டி | 500807493-6-37 |
| இரத்தினபுரி | 500817287-1-21 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

**2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**



## வாகினி சோதிலிங்கம்
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு - 2ஏ,சி**

நான் தரம் 1 - 13 வரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். நான் ஒரு முகாமையாளராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு உயர்தரத்தில் வர்த்தகத்துறையைத் தேர்வு செய்தேன்.

பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் பல தோல்விகள், தடைகள் வந்தபோதும் அவற்றைக் கண்டு துவண்டு போகாது அவற்றையெல்லாம் சிறப்பாக வெற்றிகொண்டு 2 வருடங்கள் விடா முயற்சியுடன் எனது கல்விப் பயணத்தைத் தொடர்ந்தேன். இதன் பலனாக உயர்தரப் பரீட்சையில் இத்தகைய பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 48ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டேன்.

**சந்திப்பு: விக்ரோறி,மூர்த்தி**

இதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இந்த நிலையை அடையத் துணையாக இருந்த இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, எனது பாடசாலையில் ஆக்கமும், ஊக்கமும் அளித்த எனது பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## சோபிதா தெய்வேந்திரம்
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு - 3ஏ மாவட்ட நிலை - 13**

சிறு வயதிலேயே அப்பாவை இழந்து விட்ட என்னை எந்தவித குறையும் தெரியாமல் வளர்த்து ஆளாக்கிய எனது அம்மாவிற்கு பெருமையையும் சந்தோசத்தையும் பெற்றுக் கொடுப்பதே எனது முதல் கடமையும் குறிக்கோளுமாகும்.

சாதாரணதரம் கற்கும் போதே வர்த்தகபாடம் ஏனோ என்னைக் கவர்ந்தது. உயர் தரத்தில் வர்த்தகத்துறையில் கற்கவேண்டும் என்ற ஆசை அப்போதே துளிர்விட்டது.

இதன்படி வர்த்தகத் துறையில் வணிகக்கல்வி, கணக்கீடு, பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்றேன். நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு வழிகாட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு குழுக்கற்றலுக்கு உதவிய எனது நண்பிகளுக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

என் தேடலை திருப்தி செய்ய நூல்களை வழங்கிய கல்லூரி நூல் நிலையத்தினருக்கும் உடுப்பிட்டி சனசமூக நிலையத்தினருக்கும் எனது நன்றிகள்.



## தில்லையம்பலம் முகுந்தன்
**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**உயிரியல் பிரிவு - ஏ,2பி மாவட்ட நிலை - 31**

விஞ்ஞானப் பிரிவில் 2009ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மீண்டும் எழுச்சி பெற்று நூற்றாண்டை நோக்கி மிடுக்குடன் வீறுபோடும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து தொடர்ந்தும் பல்கலைக்கழகத் திற்கு கலை, வர்த்தக, மருத்துவ, பொறியியல் துறைகளில் மாணவர்கள் வருடம்தோறும் அனுமதி பெற்று வருவதுடன் இம்முறையும் மருத்துவத்துறைக்கு நான் தெரிவு செய்யப்பட்டிருப்பதையிட்டு கல்லூரித் தாய்க்கு பெருமை சேர்த்தேன் என்ற ஆத்ம திருப்தி அடைகின்றேன்.

கற்றல் பற்றிய நுணுக்கங்களையும் கற்றலுக்கான ஊக்கத்தையும் அதிபர், ஆசிரியர்கள் வழங்கினார்கள். கற்ற கல்வியையும், பெற்ற அனுபவங்களையும் மனதில் கொண்டு உறுதியுடன் படித்தேன். கடந்தகால வினாக்களை அலகுரீதியாக ஒழுங்குபடுத்தி பூரண விளக்கத்துடன் கற்றதால் வினாக்களை அணுகும் முறையும் விடைகளை எழுதும் முறையும் இலகுவாக அமைந்தது. இதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயர்தரப் பரீட்சையை எதிர்கொள்வதற்கு கடவுள் நம்பிக்கையும், விடாமுயற்சியும், திறமையும் இருந்தால் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



## சிவபாதம் சுரேகா
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**கலைப்பிரிவு -2ஏபி**

நான் எனது ஆரம்பக் கல்வியினை கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும் உயர் கல்வியினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி யிலும் கற்றுக் கொண்டேன். உயர் கல்விக்காக கலைப் பிரிவைத் தேர்வு செய்து தமிழ், அளவையியலும் விஞ்ஞானமுறையும், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைப் பயின்று ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சையில் 2ஏபி பெற்றுக் கொண்டதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் வெற்றிக்கு வழியமைத்த இறைவனுக்கும் அதிபர், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எனது குடும்பத்தினருக்கும் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.



## அர்ச்சனா விக்னேஸ்வரன்
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**வர்த்தகப் பிரிவு-2ஏபி**

சாதாரண குடும்பத்தில் பிறந்த நான், தரம் ஒன்று முதல் உயர்தரம் வரையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலே கல்வி பயின்றேன். ஜி.சி.ஈ. சா/த பரீட்சையில் 7ஏ, 3பி பெறுபேறு பெற்றேன்.

உயர்தரத்திற்கு கணிதத்துறையைத் தெரிவு செய்வதே எனது விருப்பம். எனினும் அம்மாவின் விருப்பப்படி வணிகத்துறையை தெரிவு செய்து இத்தகையபெறுபேறு பெற்றேன்.

அதற்கு வேண்டிய அனைத்து ஊக்குவிப்புக்களையும் எனது பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள் வழங்கினார்கள். அவர்களுக்கும் எனக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் மனம் சோர்ந்து நின்ற வேளைகளில் அம்மா எனக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறி வேண்டிய உதவிகளைச் செய்வார். அப்பாவின் கனவு நான் பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் என்பதாகும். குடும்ப சூழ்நிலையும் தாயின் ஊக்கமும் சகோதரர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற எண்ணமுமே நான் இந்நிலைக்கு வரக்காரணம் ஆகும்.



## பாரதி பொன்னையா
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**கலைப்பிரிவு-2ஏபி மாவட்டநிலை-46**

நான் தரம் ஒன்றிலிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலேயே கற்று வருகிறேன். உயர்தரத்தில் இப் பெறுபேற்றினைப் பெறுவதற்கு அத்திபாரமாக அமைந்த எனது கல்லூரி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், உயர்தரத்தில் கற்பித்த ஆசிரியர்கள், குடும்பத்தினர் மற்றும் அயலவர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறேன்.

மற்றும் பாடத்தில் எழுகின்ற சந்தேகங்களை வாஞ்சையுடன் தீர்த்துவைத்து எனது வாழ்விற்கு மேலும் வளம் சேர்த்த தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அனைத்திற்கும் மேலாக, சிறுவயதிலேயே தந்தையை இழந்திருந்தும் அந்தக்குறையே அறியாத வகையில் எனது ஒளிமயமான எதிர்காலத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர் எனது அன்னை. நான் மேலும் எனது கல்வியைத் தொடர்ந்து, நாட்டில் ஒரு நற்பிரஜையாக விளங்கவும், அதனைக்கண்டு எனது அன்னை மனங்குளிரவும் எனது அன்னைக்கு நீண்ட ஆயுளை வழங்கவேண்டும் என விநாயகப்பெருமானை மன்றாட்டத்துடன் சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கிறேன்.



## சிவகாமி சபாரட்ணம்
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**வர்த்தகப் பிரிவு, ஏ2பி**

நான் எனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் பயின்றேன். பின் தரம் 8இலிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இணைந்து கொண்டேன். பெற்றோரின் ஆதரவுடனும், ஆசிரியர்களின் வழிகாட்டலுடனும் கடவுளின் ஆசியுடனும், சிறுவயதிலிருந்தே கல்வியை ஆர்வத்துடன் கற்று வந்தேன். இதனால் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 6ஏ, 4பி, என்னும் பெறுபேற்றை பெற்றேன். அதே உற்சாகத்துடன் உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவை விருப்பத்துடன் தெரிவு செய்து நன்றாகப் படித்து இப்பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். எனவே கல்வியை விருப்பத்துடன் படித்தால் எந்தவொரு வெற்றியையும் ஈட்டமுடியும் என உணர்ந்துள்ளேன். இச் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு காரணமாகவிருந்த என்னைச் சிறுவயதில் வழிப்படுத்திய விபுலானந்தா கல்லூரிக்கும் உயர்கல்வியைத் தந்த உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கும், எனக்கு கல்வி பயிற்றுவித்த சகல ஆசிரியர்களுக்கும் எனது கல்விக்கு பெரும் ஆதரவாக இருந்த குடும்பத்தாருக்கும், நண்பிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## கஜந்தி சண்முகநாதன்
**வேம்படி மகளிர் கல்லூரி**
**வணிகக் கல்வி 2ஏபி, மாவட்டநிலை-68,**

எனது ஆரம்பக் கல்வியை இந்து ஆரம்ப பாடசாலையில் கற்றேன். புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

தொடர்ந்து வரும் காலங்களில் நன்கு கற்று ஜி.சீ.ஈ. சாதா ரணதரப் பரீட்சையில் 8ஏபிசி பெற்றேன். நான் தரம் 11இல் கற்கும் போதே வணிகக்கல்விப் பாடத்தை மிக விருப்புடன் கற்றதால் உயர்தரத்திலும் இப் பாடத்தையே தேர்ந்தெடுத்தேன்.

உயர்தரம் கற்கத் தொடங்கும் போதே நான் திறமைச்சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்வேன் என்ற மன உறுதியிருந்தது. உயர்தரக் கல்வியை ஆரம்பித்ததில் இருந்து சிறு குறிப்புக்கள் எடுத்தும் எனது கற்கும் திறமைக்கும் ஏற்ப பல வழிகளைக் கையாண்டேன். பரீட்சைக்கு சில மாதங்களின் முன் என் கற்கும் நேரத்தை உயர்த்தியும், என்னைத் தியாகம் செய்து கற்றேன். அதற்கு என்பெற்றோர்கள் முழு ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். எனக்காக 10 மாதங்களிற்கு மேலாக வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதையே நிறுத்தி எனக்கு ஊக்கமளித்தனர்.

எனது வெற்றிக்கு முதற்காரணம் எனது மன உறுதியும் கடும் முயற்சியும் ஆகும். மேலும் முக்கிய காரணமாக விளங்குவோர் எனது பெற்றோரும், கல்விகற்பித்த மதிப்பிற்குரிய ஆசான்கள் மற்றும் எனது நண்பிகளுமாவர். எனக்கு நண்பிகளுடன் இணைந்து கூட்டாகக் கற்பதை விட தனித்து மன ஒருமுகமாகக் கற்பதே பிடித்திருந்தது.

பரீட்சை எழுதும் போது எதுவிதமான பதற்றமும் இல்லை. ஏனெனில் பூரண மாக என்னால் முடிந்தவரை காலத்தை வீணடிக்காது கற்றிருந்தேன். எனக்கு இறைவன் மேல் நம்பிக்கை மிக அதிகம். எனவே பரீட்சை எழுதியதும், பெறுபேறும் இறைவன் செயல் என்றே விட்டிருந்தேன்.

என் சகோதர சகோதரிகளான எதிர்கால மாணவர்களுக்கு சொல்வது என்னவெனில் உங்களுக்கு நடைபெறும் தவணைப் பரீட்சைகளை அலட்சியம் செய்யாதீர்கள். உங்கள் வெற்றிக்கு இவையே படிக்கற்கள். எங்கு பரீட்சை நடந்தாலும் தவறவிடாது செய்யுங்கள். தொலைக்காட்சி பார்ப்பதைச் சிறிது சிறிதாகக் குறைத்து கைவிடுங்கள். உங்கள் ஆசிரியர்களின் ஆசீர்வாதத்தை முழுமையாகப் பெறுங்கள். ஏனெனில் இதுவே உங்களுக்கு பரீட்சை மண்டபத்தில் [illegible] உயர் பெறுபேறு பெற்று பல்கலைக் கழகம் செல்ல என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை வலி.கிழக்குப் பகுதியில் அதிகரிக்கிறது

கோப்பாய், டிசெ.21

வலி.கிழக்கில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் கூட்டம் கூட்டமாகத் திரியும் இந்த நாய்கள் பொதுமக்களைக் கடிக்கவருவதாகவும், நாய்களின் தாறுமாறான நடமாட்டத்தால் வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் சுகாதாரப் பகுதியினர் நாய்களைப் பிடித்து அழித்து வந்தமையால் இவற்றின் பெருக்கம் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் தற்போது நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு சட்டத்தில் இடமின்மையால், நாய்களுக்கு உரிய காலத்தில் கருத்தடையினை மேற்கொண்டு நாய்களின்பெருக்கத்தைக் கட்டுப்படுத்து மாறு சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (04-72)


## Spoken English & Grammar

O/L எடுத்த மாணவர்களுக்கான விசேட வகுப்பு

காலம்: 1 மாதம் - (தினசரி 2 hrs.class)

By: Mr.B.Ruban *(A/L English Teacher & BBA)*

ஆரம்பம்: 23-12-2009 *(JTI- Jaffna-10 am)*

நிரு- கோண்டாவில்-8 am, திகழ்-இணுவில்-3 pm)

(வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்)

SMS Your address for Course Details

T.P: 0779785749/ 0718561532

(91553)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முகாமைத்துவ உதவியாளர்

செல்வி இ. நிதர்சனாவின் பாசமிகு தந்தை

அமரர் ஆனந்தீஸ்வரர் இராஜரத்தினம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், நோவண்ட்ஸ் லிமிட்டெட்-கொழும்பு)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்.

(வி/563405) யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தயாமணி அழகரத்தினம் (தயா ரீச்சர்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாமணி அழகரத்தினம் 18.12.2009 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மு.அழகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லப்பாமான்-நேசம்மா தம்பதியின் மகளும் காலஞ்சென்ற முருகேசு-தங்கம்மா தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற பென்மான் மற்றும் ராணி-ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோகரன்(U.K), மாலதி (ஆசிரியை-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), பிரபாகரன் (ஆசிரியர்-St-Johns College), சரளா(Germany), சாந்திகரன் (U.K), ஆகியோரின் அருமைத் தாயும் குட்டிசேர்வலி (U.K), அரியானந்தம் (மேற்பார்வையாளர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஈஸ்வரி(St-Johns College), சூரியகுமார் (Germany), கீர்த்திகா (U.K) ஆகியோரின் அன்பு மாமியும் நிரோஜி, நிலோஜி, டிலானி, டிலக்ஷன், அனோஜி,ஆரணி, அருளினி, அல்பிரட், ஜோய் பிரட், ஜெனிக்கா, ஜெனிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.12.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் அங்கிலிக்கன் திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (91664)

பிரபாகரன் (மகன்), அரியானந்தம் (மருமகன்).

### திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை (19.12.2009) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சதாசிவம் -லக்சுமி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராசம்மா, பொன்னம்மா (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி, சின்னத்துரை, பரமகுரு, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கமுத்து, மகேஸ்வரி (அவுஸ்திரேலியா), கனகாம்பிகை, மார்க்கண்டு, கங்காதேவி, திலகவதி (கனடா), மேகநாதன்(கனடா), காலம் சென்ற திருநா வுக்கரசு கேதீஸ்வரன் (கனடா), ஆகியோரின் அன்புத்தாயாரும் கணேசலிங்கம், இரத்தினசிங்கம் (அவுஸ்ரேலியா), சிவமூர்த்தி, பரமேஸ்வரி, சர்வானந்தன், சுவீந்திரராசா(கனடா), அமுதா(கனடா), யசோதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கவிதா, இளங்கோ,லதா, சுவேசினி, சுதர்சினி, ஜெய லோஜினி, சசிந்தினி, ரேணுகா,சிவாகினி,கஜன்,சாரங்கன், நிரோஜன், நிதர்சன், நிசாந்தன், நிசாழினி, சதீஸ்கண்ணா, சயந்தி, மயூரன், தனுசன், மேனகன், பிரவீன், சிந்துஜா, திசாந், வைஷ்ணா, ஆகியோரின் பேர்த்தியும் விதுசன், விதுசிகா, அபிலாசினி, சஜீணன், ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:

மீசாலை மேற்கு, மீசாலை. (ட\563409)

கி.மார்க்கண்டு (நிசாழினி பந்தல் சேவை)

### இராஜ வீதியில் நேற்று சிரமதானம்

நாவற்குழி, டிசெ.21

கோப்பாய் இராஜ வீதியில் இலகு வேலைத்திட்டத்தின் கீழ் கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

காலையில் திடீரென மழை கொட்டிய வேளையில் இலகு வேலைத் திட்டத்தின் கீழ் சிரமதானப் பணியில் ஈடுபட்ட மக்கள் மழைக்கு நனைந்தனர்.

இராஜ வீதியின் இரு பக்கங்களில் இருக்கும் பற்றைகள் மற்றும்புல்பூண்டுகள் இவ்வாறு இலகு வேலைத் திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. (1-224)

### கடும்மழை காரணமாக வலி.கிழக்கில் பயிரழிவு

கோப்பாய், டிசெ.21

வலி.கிழக்கு பிரதேசத்தில் கடந்த சில நாள்களாகத் தொடரும் மழை காரணமாக விவசாயிகளுக்கு பெரும் பயிரழிவு ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

தாழ்ந்த நிலப் பகுதிகளில் வெள்ள நீர் பயிர்களை மூடி நிற்பதால் பயிர்வகைகள் அழுகி அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக நெல், வெங்காயம் மற்றும் மரக்கறிப் பயிர்களும் இவ்வாறு அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலஇடைவெளிக்குப் பின் புதிதாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட பலரும் இவ்வாறு பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-72)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தவில் வித்துவான் நல்லரசு முருகானந்தம்

அவர்கள் கடந்த 15.12.2009 அன்று கொழும்பு இந்து கலாசார அமைச்சினால் கலாபூசண விருது வழங்கப்பட்டதையொட்டி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(91663)

354, பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோயில்.

வாழ்த்துவோர்: மருமக்கள் R.ஆனந்தகணேஸ் M.தயானந்தன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் 17.12.2009 அன்று சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட யாழ்ப்பாணம், அச்சுக வீதியைச் சேர்ந்த எமது நண்பனும், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவனுமாகிய

மரியதாஸ் யூட்டினேசை

மேலும் தனது தொழிலில் பிரகாசிக்கவும் பட்டங்கள் பல பெற்று சிறப்புடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

(91665)

வாழ்த்துவோர்: யாழ்ப்பாணம், கொழும்பு நண்பர்கள்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு....!

மலர்வு 21 . 07 . 1940

உதிர்வு 21 . 12 . 2007



அமரர்

தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்

எங்கள் இதய தெய்வமே சின்னையாவே!
தன் அடியை இருட்டாக்கி
ஒளியை பரவவிடும் விளக்கைப் போல
உங்களை இருட்டாக்கி
எங்கள் வாழ்வை ஒளிர விட்ட
எங்கள் தெய்வம் சின்னையாவே!
இரண்டு ஆண்டுகள் கடந்தால் என்ன?
இன்னும் இரு ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் எண்ணங்களில் என்றென்றும் ஒளிவிடுவீர்கள்.

விநாயகர் வீதி, காரைநகர். (வி/563408)

ஐயாத்துரை (காந்தி) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது சூழலில் மருத்துவப் பயன்மிக்க பல்வேறு தாவரங்கள்;
# அவற்றை இனங்கண்டு பாடசாலையில் மூலிகைத் தோட்டம் அமைப்போம்

நாம் இப்போது வீடுதோறும் தலைவலி மாத்திரை முதற்கொண்டு கால்வலி மாத்திரைகள் வரை வாங்கி வைத்துள்ளோம். காரணம் அவை அவசரத்திற்கு உதவும் என்ற நம்பிக்கையே. அத்துடன் வீட்டில் அவசரத்திற்கு உதவ மூலிகைச் செடிவளர்ப்போம் என்ற எண்ணம் எம்மத்தியில் உதிக்குமாயின் அது ஒரு உன்னதச் செயற்பாடாகும்.

மூலிகை வளர்ப்புப் பற்றிய



சிந்தனையை இளம்பராயத்திலேயே சிறுவர் மத்தியில் விதைப்போமாயின் அதன்மூலம் சிறந்த பலனைப் பெறமுடியும்.

சிறுவர்களை எதிர்கால வாழ்விற்கு தாயார்ப்படுத்தும் நிலையங்களான பாடசாலைகளில் பாடவிதான செயற்பாடுகள் ஊடாகவும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஊடாகவும் மூலிகைத் தோட்டங்களை வடிவமைத்து மாணவருக்குப் பயிற்சி வழங்க முடியும்.

## மூலிகைத் தோட்டம் அமைத்தல்

பாடசாலையில் தாவரங்கள் வளர்வதற்குப் பொருத்தமான நீர்வசதி, போதிய அளவு சூரிய ஒளிகிடைப்பு, பாதுகாப்பு மிக்க இடமொன்றை தெரிவு செய்து கொள்ள வேண்டும். இடவசதி குறைவான பாடசாலைகளில் சாடிகளின்



உதவிகொண்டும் இவ்வாறான மூலிகைத் தோட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

மூலிகைத் தாவரங்களை இனங்காண்பதற்கு தாவரத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பலகையை தாவரத்தின் அருகில் காட்சிப்படுத்தல் இன்றியமையாதது. இங்கு காலத்துக்குக் காலம் இத்தாவரங்களைப் பராமரித்தல், அவற்றின் மருத்துவ ரீதியான பயன்கள், இவற்றைப் பயன் கொள்வதிலுள்ள உத்திகள் போன்றவற்றை மாணவர் அறிவதற்கு வகை செய்தல் வேண்டும்.

## 'மூலிகைத் தினம்' கொண்டாடல்

மூலிகைப் பயிர்கள் நன்கு செறிந்து வளர்ந்திருக்கும் காலத்தில் மாணவரின் பெற்றோரையும், அயல் சமூகத் தாரையும் வரவழைத்து மூலிகைத் தினம் கொண்டாடலாம். இத்தினத்திற்கு வருகை தருவோருக்கு மூலிகைத் தோட்டத்தைப் பார்வையிடச் சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் மூலிகைகள் தொடர்பான பல்வேறு மருத்துவவியல், பயிர் உற்பத்தியியல் தொடர்பான உத்திகளையும், ஆலோசனைகளையும் எடுத்துக் கூறலாம். இத்துடன் இத்தினத்திற்கு சுதேச மருத்துவர்கள், பாரம்பரிய வைத்தியர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அனுபவம்மிக்க முதியவர்கள் போன்றோரை கௌரவ அதிதிகளாக அழைத்து அவர்களுடன் பாடசாலைசார் சமூக உறுப்பினர்களுக்கு பல்வேறு மூலிகை மருத்துவம், மூலிகை உற்பத்திச் செயற்பாடுகள் சம்பந்தமாக கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கலாம். இவ்வாறான செயற்பாடுகளினூடாக மூலிகைப் பாவனை பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் சிறந்த முறையில் விதைக்கலாம்.

## பாடசாலைகளில் மூலிகைத் தோட்டம்


பல்வேறு மூலிகைத் தாவரங்களையும் இனங்காண்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதாவது நமது சூழலில் காணப்படும் அனேக தாவரங்கள் மருத்துவரீதியில் பயன்மிக்கதாக இருக்கலாம். இவற்றை மூலிகைத் தோட்டங்களில் காட்சிப்படுத்துவதால் அவற்றின் மருத்துவப் பயன்களை மாணவர் அறிவர். இவ் அறிவானது மாணவரூடாகச் சமூகத்திற்கு பரம்பலடையும்.

நாம் தற்போது பயன்படுத்தும் அலோபதி மருத்துவமுறையில் செயற்கையான மருந்துகள், வேதியப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்படினும், அவை வேகமாகச் செயற்பட்டு நோய்களைக் குணப்படுத்திய போதும்கூட நீண்ட நாள்கள் தொடர்ந்து பயன்படுத்தும் போது பற்பல தகாத விளைவுகளை உண்டுபண்ணுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. அத்துடன் சிலவேளைகளில் சுயமருந்துப் பயன்பாடுகளும் உரிய மருத்துவரின் அறவுரையின்றி எடுத்துக் கொள்ளும் மருந்துகளும் பக்கவிளைவை ஏற்படுத்தலாம். ஆனால் மூலிகைகள் கொண்டு செய்யும் வைத்தியம் பக்க விளைவற்ற சிறந்த நிவாரணியாகும். எனவே பக்க விளைவின்றிச் செயற்படும் சுதேச வைத்தியத்திற்கு ஆதாரமாக உள்ள மூலிகைகளை வழங்கும் மூலிகைத் தோட்டங்களைப் பாடசாலைகளூடு பிரபல்யப்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும்.

பாடசாலையில் மூலிகைத் தோட்டம் இருப்பது முதலுதவி மருந்தாகக் கூட அமையும். அதுமட்டுமன்றி பல்வேறு நோய்களுக்கு நிவாரணியாகவும், வருமுன் காப்போனாகவும் தொழிற்படும். மூலிகைத் தோட்டம் வீட்டிலும் சரி, பாடசாலையிலும் சரி இருப்பது தங்களுடன் ஒரு மருத்துவர் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

பாடசாலையில் அமைக்கப்பட்ட மூலிகைத் தோட்டம் மூலிகை சம்பந்தமான விழிப்புணர்வையும், சுதேச வைத்தியத்தின் மீதான நம்பிக்கையையும் வலுவடையச் செய்யலாம்.

மாணவர்கள் மூலிகை வளர்ப்புச் செயற்பாட்டில் தாராளமாக ஈடுபடும்



சந்தர்ப்பத்தில் மூலிகை மருந்துகளின் விலையும் குறைவடையும். அத்துடன் பசுமை நிறைந்த உடன் மூலிகைகளைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. மேலும் மாணவர் தமது ஓய்வு நேரச் செயற்பாடாகக் கூட மூலிகைத் தோட்டத்தை வீடுகளில் அமைத்து ஓரளவு வருமானம் பெறவும் முடிகிறது.

மூலிகைச் செடிகள் பலவும் காடுகளில்தான் வளர்கின்றன. இவற்றைத் தேடிச் சேகரிக்கச் செல்வோர் அவற்றை முழுச் செடியாகப் பிடுங்கி வந்துவிடுகின்றனர். இதனால் விரைவில் இவ்வினங்கள் இல்லாது போய்விடும். எனவே இது போன்ற இனங்களைப் பாதுகாக்க மூலிகைத் தோட்டம் அவசியமாகிறது.



இதே போல மூலிகைத் தாரங்களை அங்கொன்று இங்கொன்றாகத் தேடிச்சென்று பிடுங்க வேண்டிய தேவையுள்ளது. மூலிகைகளை ஒரு இடத்தில் நடுவதன் மூலம் அவைகளைத் தேடியலைய வேண்டிய தேவையில்லை.

மூலிகைத் தோட்டத்திற்கு வரும் மாணவர்கள் பல்வேறு தாவரங்களின் விசேட பண்புகளையும், அவை காணப்படும் இடங்களைப் பற்றியும் தம்மிடையே கலந்துரையாடல் மூலம் பல்வேறு தகவல்களையும் பரிமாறிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

பல்வேறு பாடங்களுக்குமுரிய கற்கைச் சூழலாகக் கூட மாணவர்கள் மூலிகைத் தோட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நவீன கல்வி முறைகளுடன் நன்கு பிணைந்ததான வகுப்பறைகளுக்குப் புறம்பான பங்கேற்றல் கற்றல் முறையொன்று இங்கு பிரயோகிக்கப்படுவதுடன் பிள்ளைகளின் அவதானிப்பு, புதிதுகாண்துண்டல், ஆய்வு, பகுத்தறிதிறன் போன்ற பண்புகளை வளர்ப்பதற்கும் ஏற்றதான ஓர் இடமாகவும் இது அமைகிறது.

மாணவர் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடசாலை மூலிகைத் தோட்டம் அமைக்கும் போது ஒன்றாக உழைக்கும் பழக்கம், சகோதர மனப்பாங்கு, தலைமைக்கு கீழ்படிதல், கூட்டுமுயற்சி, பிறரின் இயலாமைக்கு உதவுதல் போன்ற நற்பண்புகள் வளர்வதற்கும் இது களமாக அமையும்.

பாடசாலையில் மூலிகைச் செடிவளர்ப்பதன் மூலம் நாம் ஒரு சிறிதளவேனும் மூலிகைக் காற்றைச் சுவாசிக்க முடியும். அதுமட்டுமன்றி தொடர்ந்து வகுப்பறைக் கற்றலில் ஈடுபட்ட மாணவன் நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மூலிகைத்

ப.அருந்தவம்
ஆசிரிய ஆலோசகர் [விவசாயமும், உணவுத் தொழில்நுட்பமும்]
வலிகாமம் கல்வி வலயம்.

தோட்டத்தினூடாகச் சென்று வருவானாயின் அவனது மனநிலையில் ஓர் உத்வேகநிலை தோன்றி அவனது கற்றல் செயற்பாடு மேலும் மெருகூட்டப்படும். பல்வேறு வகையிலும் பாடசாலையில் மூலிகைத் தோட்டம் அமைப்பானது மாணவரின் ஆரோக்கியத்திற்கு ஓர் [illegible]ணாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

நமது மூதாதையர்கள் பயன்படுத்திய அனுபவ பூர்வமான மூலிகைகள் அறிவியல் பூர்வமிக்க நல்ல மருந்துகள் என நிரூபணமாகிய இவ்வேளையில், பாடசாலைகள் தோறும் மூலிகைத் தோட்டம் அமைத்து மூலிகைகள் சம்பந்தமான விழிப்புணர்ச்சியையும் நம்பிக்கையையும் எமது சமூகத்தில் ஏற்படுத்தி நிலையான பேண்தகு வாழ்க்கைக் கோலமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எம்மாலியன்ற பங்களிப்பைச் செய்வோம். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.07.1976

உதிர்வு 01.01.2009

## அமரர்
## நடராசர் கமலராஜ்

கணக்காளர்
(பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி வடக்கு, பரந்தன்)

கள்ளங் கபடமற்ற எங்கள் கண்மணியே கமலராஜ்
காலம் ஒருவருடம் கணப்பொழுதில் ஓடியதேன்?
கற்றோரும் மற்றோரும் போற்றும் கணக்காளனே - எம் குலவிளக்கே!
கண்ணீரைக் காணிக்கையாய் வைத்து பெற்றார், உற்றார்,
உறவினர் கதறியழ
கைபிடித்த நாள் முதலாய் கைவிடாமல் காத்துவந்த உனது காரிகையோ
கண்ணிலே நீர் காயாமல், ஊனுருக்கி துடிதுடித்து நிற்க
பெற்றமகள் பவிசாவோ அப்பா எப்போ வருவார்?
எனக் கேட்டுத் தவியாய்த் தவித்து நிற்க
மனமிரங்கி மற்றுமொருமுறை எம்முறவை புதுப்பிக்க இவ்வுலகில்
உயிர்பெற்று ஓடிவந்து எம் அனைவருக்கும் நற்சாந்தி தாராயோ!

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(சி/563369)

குடும்பத்தினர்.

# கூட்டுறவு பனம் தொழில் வல்லுநர் மாநாடு - 2009

## நன்றி தெரிவிக்கின்றோம்

**11.12.2009 இல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களினால் நடத்தப்பட்ட மாபெரும் கூட்டுறவுப் பனம் தொழில் வல்லுநர் மாநாட்டில்**





★ பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மாண்புமிகு கௌரவ சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்,

★விசேட அதிதியாகக் கலந்து சிறப்பித்த சுகாதார சேவைகள் அமைச்சர் கலாநிதி நிமால் சிறிபால டி சில்வா அவர்களையும்,





★சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்த கௌரவ வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அவர்களையும்,

★வாழ்த்துச் செய்தி வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களையும்,

★வாழ்த்துரை வழங்கி மாநாட்டைச் சிறப்பித்த யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. நா.சண்முகலிங்கன் அவர்களையும்

**கௌரவ அதிதியாகக் கலந்து மாநாட்டைச் சிறப்பித்த வடபிராந்திய வங்கி உதவிப் பொதுமுகாமையாளர்களாகிய**

- ★ மக்கள் வங்கி திரு.த.க.ஆனந்தராஜா அவர்களையும்
- ★ இலங்கை வங்கி திரு.என்.சீவரத்தினம் அவர்களையும்
- ★ தேசிய சேமிப்பு வங்கி திரு.வி.அருளானந்தம் அவர்களையும்

**ஆய்வுக்கட்டுரை வழங்கி நிகழ்வினைச் சிறப்பித்த**

- ★ திரு.க.தேவராஜா (பீடாதிபதி வணிகமுகாமைத்துவம், யாழ்.பல்கலைக் கழகம்) அவர்களையும்
- ★ கலாநிதி ஜி.மிகுந்தன்(விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களையும்,
- ★ திரு.மா.சின்னத்தம்பி (விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்.பல்கலைக் கழகம்) அவர்களையும்,
- ★ திரு.கி.இராஜேஸ்கண்ணன் (விரிவுரையாளர் சமூகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களையும்,
- ★ திரு.கோ.கோகுலதாசன் (முன்னாள் பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை) அவர்களையும்,
- ★ திரு.க.நடராசா (முன்னா செயலாளர்,வட.மா.ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், தலைவர் ப.அ.சபை) அவர்களையும்,
- ★ சிறப்பு அதிதியாக வருகைதந்து நிகழ்வினைச் சிறப்பித்த பிரதேச செயலாளர்களையும் பிரதேசசபைச் செயலாளர்களையும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் அவர்களையும் மாவட்டக் கூட்டுறவு அலுவலர்களையும்,
- ★ யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவர்களையும்,
- ★ யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் தலைவர்கள் அவர்களையும்,
- ★ அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் திரு.சி.வி.கே.சிவஞானம் அவர்களையும்,
- ★ மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒழுங்கமைத்து வழங்கிய நிகழ்ச்சித் தொகுப்பாளர் திரு.த.புவனேந்திரன் (முகாமையாளர் இலங்கை வங்கி அச்சுவேலி) அவர்களையும்,
- ★ தேசிய அமைப்பாளர் திரு.ப.சீவரத்தினம் அவர்களையும்,
- ★ வாழ்த்துச்செய்தி வழங்கிய பெரியோர்கள், திணைக்களத் தலைவர்கள் அவர்களையும்,
- ★ மாநாடு சிறப்புற அமையப் பத்திரிகை வாயிலாக வாழ்த்துச்செய்தி பிரசுரித்த சனசமூக நிலையங்கள், ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள்,நலன்புரிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமூக முன்னேற்றச் சங்கங்கள், பாடசாலைகள், ஆலய பரிபாலன சபைகள் ஆகியவற்றிற்கும்,
- ★ பத்திரிகை வாயிலாக விளம்பரங்கள், செய்திகள் பிரசுரித்து மாநாட்டை எழுச்சிப்படுத்திய உதயன், தினக்குரல் பத்திரிகை நிறுவனங்களையும்
- ★ இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக செய்திகள் பிரசுரித்து மாநாட்டை எழுச்சிப்படுத்திய உதயன், தினக்குரல் இலத்திரனியல் ஊடகங்களையும்
- ★ பனை தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கும்

எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாநாட்டு ஏற்பாட்டுக் குழு,**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம்,**
இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(சி/563371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.06.1986

★ இலங்கைக்கு உதவி எதுவும் வழங்கவேண்டாம் என உலக நாடுகளுக்கு த.வி.கூட்டணி அவசர வேண்டுகோள்.

★ இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆக்க பூர்வமான தீர்வொன்றை எட்ட இந்திய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் தமிழகத்தில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப்போவதாகத் தமிழகத் தலைவர்கள் எச்சரிக்கை.

★ இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இலங்கை அரசு சமர்ப்பித்த புதிய யோசனைகள் குறித்து சில இரகசியமான விளக்கங்கள் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.

17.06.1986

★ 'தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதற்கெதிராக நான் குரல் கொடுக்கத் தயங்கமாட்டேன்' என கலவான தொகுதியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் டி யூ குணசேகர தெரிவிப்பு.

★ தொண்டைமானாறு இராணுவமுகாமிலிருந்து பலாலி முகாமுக்குச் சென்ற இராணுவத்தினர் 19 வயது மாணவனை ஓடவிட்டுச் சுட்டுக்கொன்றனர்.

★ திருகோணமலை மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள நேரங்களில் தமிழ்க் கிராமங்களில் ஊர்காவல் படையினர் அட்டகாசம்.

18.06.1986

★ இலங்கைக்கு வெளிநாட்டு நிதி உதவி கிடைப்பதில் தடங்கல்கள் ஏற்படும் என மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிப்பு.

★ இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் பங்களிப்பைப் பிரிட்டன் ஆதரித்து வருவதாகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற விவகார துணைஅமைச்சர் தெரிவிப்பு.

★ யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் தனியார் லொறிகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் அனுமதிப் பத்திரம் பெற்றால் மட்டுமே ஆனையிறவுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படுமென உத்தரவு.

19.06.1986

★ ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனி மாகாண சபைகள் அமைப்பதென்பதே சர்வகட்சி மாநாட்டின் முக்கிய யோசனையாக அரசு முன்வைக்கும்.

★ தமிழரும், சிங்களவரும் ஒன்றாக வாழ்வது இனிமுடியாத காரியம் என த.வி. கூட்டணிப் பிரமுகர் நீலன் திருச்செல்வம் தெரிவிப்பு.

★ அரசு சமஷ்டி ஆட்சிமுறையை அமுலாக்க முன்வந்தால்கூட அது காலங்கடந்த தீர்வா கவே அமையும் என யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் விமர்சிப்பு.

20.06.1986

★ இலங்கை அரசின் மாகாணசபை யோசனை குறித்து அதிருப்தி அடைந்துள்ள இந்திய அரசு இரு தரப்பாரும் ஏற்கக்கூடிய திட்டத்தைத் தானே தயாரிக்க ஆலோசித்து வருகிறது.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நிதி உதவி எதுவும் வழங்கப் போவதில்லை என இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்துவிட்டதாக நிதி அமைச்சர் ரொனி டி மெல் அறிவிப்பு.

★ இன்னமும் ஒரு வாரத்தில் இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜே. ஆர். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது இறுதி யோசனைகளைச் சமர்ப்பிப்பார் என அமைச்சர் அத்துலத்முதலி அறிவிப்பு.

21.06.1986

★ தோலகட்டி ஆச்சிரமத்தில் புகுந்த இராணுவத்தினரால் கிறிஸ்தவ துறவி சுட்டுக்கொலை.

★ திருகோணமலையில் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 12 இராணுவத்தினர் தம்மால் கொல்லப்பட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் உரிமை கோரல்.

★ மட்டக்களப்பில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட 131 தமிழர்கள் பூசா முகாமுக்கு அனுப்பிவைப்பு.

22.06.1986

★ இலங்கை அரசுக்கு உளவு பார்த்ததாகச் சென்னையில் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி கிராமிய தொழிற்துறை அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் எனத்தெரிவிப்பு.

★ அரசு இன்றைய பிரச்சினையைச் சரியாக இனங்காணத் தவறிவிட்டதென கலவான தொகுதியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு.

23.06.1986

★ இலங்கை மக்கள் கட்சியிலிருந்து அதன் தலைவரான டி.பி.இலங்கரத்ன ராஜினாமா.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு கோரி ஜனாதிபதி ஜே.ஆரால் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோவுக்குக் கடிதம் அனுப்பிவைத்தார்.

★ அரசு கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லையென த.வி.கூட்டணி முடிவு.

24.06.1986

★ அரசு கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டாமென தமிழ்க் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குமார் பொன்னம்பலத்துக்கு கட்சியின் தலைவர் அவசரத் தந்தி அனுப்பிவைப்பு.

★ ஜனாதிபதி ஜே.ஆர். ரஷ்யாவுக்கு மேற்கொள்ள இருந்த விஜயம் திடீர் ரத்து.

★ சர்வதேச விடுதலை இயக்கங்களுக்கு அளித்த அங்கீகாரம் போன்று நிபந்தனை எதுவுமின்றி எமது இயக்கத்துக்கும் இந்தியா அங்கீகாரம் வழங்க வேண்டுமென ஈரோஸ் இயக்கம் வேண்டுகோள்.

25.06.1986

★ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட மக்கள் கட்சிச் செயலாளர் விஜயகுமாரணதுங்க தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்தித்து இலங்கை நிலவரம் குறித்துப் பேச்சு.

★ திருகோணமலையில் ஆயிரம் பேரும், மட்டக்களப்பு, திருக்கோயிலில் 300 பேரும் இராணுவத்தினரால் கைது.

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகள் தமிழ்க் குழுக்களின் பரிசீலனைக்காக அவற்றிடம் இந்தியாவினால் வழங்கப்படும்.

26.06.1986

★ திருகோணமலையில் படையினரால் கைது செய்யப்பட்ட 900 தமிழர்கள் கப்பலில் பூசா முகாமுக்கு அனுப்பிவைப்பு.

★ மாகாணசபைகளுக்கு கவர்னர், முதலமைச்சர், பிரதேச சபைகள் மட்டம் வரை நிர்வாகப் பரவலாக்கம்; அரசமைப்புச் சட்டத்துக்குத் திருத்தம்; என்பன சர்வகட்சி மாநாட்டில் அரசு சமர்ப்பித்த முக்கிய யோசனைகள்.

★ அரசின் யோசனைக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஆதரவு தெரிவித்து எழுதிய கடிதம் சர்வகட்சி மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது.

27.06.1986

★ அரசின் மாகாணசபை யோசனை தமிழர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிவித்து விடுதலை அமைப்புக்களால் நிராகரிப்பு.

★ எவர் நிராகரிப்பினும் மாகாணசபை யோசனையை நிறைவேற்றியே தீருவோம் என ஜனாதிபதி ஜே.ஆர் தெரிவிப்பு.

★ திருகோணமலையில் கைது செய்யப்பட்டு பூசாவுக்குக் கப்பலில் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் அமைச்சர் தொண்டமானின் தலையீட்டால் மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

28.06.1986

★ தம்பலகாமம் கிராமத்தில் 16 தமிழர்கள் ஊர்காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

★ இரத்மலானையில் பறப்பில் ஈடுபட்டிருந்த மாசிட்டி ரக விமானம் தீப்பிடித்து எரிந்து நாசம்.

★ கொழும்பிலிருந்து ஆறு நவீன போர்க்கப்பல்களும், 400 பொலிஸ் கொமாண்டோக்களைக் கொண்ட படையும் வட பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

29.06.1986

★ நாட்டையும், சிங்கள மக்களையும் பலி கொடுக்காத எந்தத் தீர்வையும் தாம் ஆதரிக்கத் தயாரென சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

★ இராணுவ நடவடிக்கையால் தமிழ்மக்கள் அழிந்து போவதற்கு முன்னர் தம்மைக் காப்பாற்றுமாறு கோரி இந்தியப் பிரதமருக்கு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு வேண்டுகோள்.

30.06.1986

★ தமிழ்நாட்டில் வைத்து தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களின் தலைவர்களை நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார சந்திக்கிறார்.

★ இலங்கை அரசின் புதிய யோசனைகள் அடங்கிய திட்டம் தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களிடம் சென்னையில் வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரால் கையளிப்பு.

★ ஐக்கிய இலங்கைக்குள்ளான எந்தத் தீர்வையும் ஏற்கும் நிலையை நாம் தாண்டிவிட்டோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் 'இந்தியா டுடே' சஞ்சிகைக்குப் பேட்டி

# ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் உறுதுணையான செயற்பாடு அவசியம்

## பரிசளிப்பு விழாவில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்.டிசெ.21

ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வளம்பெற ஆசிரியர்களின் உறுதுணையான பங்கு மிகவும் அவசியமானதொன்றாகும்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மாகாணக்கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆரம்ப பாடசாலைகள் உள்ளன.

இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். அதே சமயம் பெற்றோரும் தமது பிள்ளைகள் கல்வி வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது முக்கிய கடமையாகும்.

ஒவ்வொரு பாடசாலைகளும் தத்தம் பிரிவில் உள்ள மக்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும். அவ்வாறு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்தில் உள்ள பல ஆரம்பப் பாடசாலைகள் முன்னேறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் சகலரையும் ஆசியர்கள் ஒரே மாதிரியான கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும். பாரபட்சம் காட்டுதல் கூடாது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் சரியான முறையில் அத்திபாரத்தை அமைக்க வேண்டியது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கடமையாகும் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் திருமதி கமலாதேவி இராசையா மாணவர்களுக்கு பரிசில்களையும், தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களையும் அணிவித்துக் கௌரவித்தார். (04-224)

# தமிழ்க்கொலையுடன் தொங்கும் திணைக்களப் பெயர்ப்பலகை

யாழ்.செயலகத்திற்கு அருகில் கண்டி வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்களத்தின் வடமாகாணத் தொல்லியல் அலுவலகத்தின் யாழ்ப்பாணக் கிளை யின் பெயர்ப்பலகையில் தமிழ் எழுத்துக்களிலும், வசனத்திலும்பிழைகள்இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தொல்பொருள் திணைக்களம் எனும் பெயருக்குப் பதிலாக, 'தொவ் பொருட் கலைத் திணைக்களம்' என பிழையாக பொறிக்கப்பட்டுள்ளது.

வீதியின் அருகே மிகத்தெளிவாக எழுதப்பட்டுள்ள இப்பெயர்ப்பலகை செயலக அதிகாரிகள் பலரும் தினமும் பார்த்து ச்செல்கிறார்களேயொழிய அதனைத் திருத்த எவரும் முயலவில்லை எனவும், இதேவேளை ஏனைய இரு மொழிகளிலும் எழுதப்பட்ட எழுத்துக்கள் பிழையின்றிக் காணப்படுவதாகவும், பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே குறித்த பெயர்ப்பலகையில் உள்ள தமிழ்க்கொலையை உடன் சீர்படுத்த உரிய




வர்கள் முன்வரவேண்டும் எனப் பொது மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (04-288)

# மழையினால் முடங்கிப்போன நல்லெண்ணெய் உற்பத்தி

## - உற்பத்தியாளர்கள் பாதிப்பு -

நவாலி, டிசெ.21

தற்போது தொடர்ந்து பெய்துவரும் பெருமழையினால் ஆனைக்கோட்டைப் பகுதியில் நல்லெண்ணெய் உற்பத்தியாளர் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பல எண்ணெய்க் கடைகள் இழுத்து மூடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அடைமழை காரணமாக நல்லெண்ணெய் உற்பத்திக்குத் தேவையான எள்ளை வெயிலில் உலரவிட முடியாமலும், எண்ணெய் வடிக்கும் செக்குகள் இயங்க முடியாமல் இருப்பதாலும் நல்லெண்ணெய் உற்பத்தியாளர்களால் எண்ணெய் வடிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இதனால் எண்ணெய் உற்பத்தி யாளர்களும், அதனை விற்பனை செய்வோரும் பாதிப்புற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதேவேளைதற்போது ஒரு போத்தல் நல்லெண்ணெய் 350 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (04-100)

# வலி.கிழக்கில் சூடுபிடிக்கிறது இரும்பு வியாபாரம்;

## மூலையில் கிடந்த பழைய இரும்புப் பொருள்களுக்கு மவுசு!

கோப்பாய், டிசெ.21

வலி.கிழக்குப் பிரதேசத்தில் பழைய இரும்புக் கொள்வனவு மும்முரமாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. வீடுகள் தொடக்கம் தொழிற்சாலைகள் வரை சைக்கிள்களில் கூவியபடி செல்லும் வியாபாரிகள் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு கிலோ பழைய இரும்பு 10 ரூபா முதல் 15 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதனால் கடந்த பல வருடங்களாகக் கவனிப்பாரின்றி சிதைவடைந்து மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இரும்புப் பொருள்களுக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

சைக்கிள் தொடக்கம் உழவு இயந்திரம் வரையான வாகனங்களில் வரும் வியாபாரிகளால் பழைய இரும்புப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. (04-72)



வலி.கிழக்கு -சைவசமய அருள்நெறி மன்றத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (04-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 10 . 01 . 1955



உதிர்வு 25 . 12 . 2006

### அமரர் முத்து அப்புக்குட்டி துரைச்சாமி
(இலங்கை வங்கிப்பாதுகாப்பு அதிகாரி)
21.12.2009

குடும்பத்தின் குல விளக்காய் என்றும் மறவா
அன்புடன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
அன்புத் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் குரல் காதில் கேட்கிறதே!
நீங்காத நினைவுகளுடன் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'புஸ்பமஹால்',
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (91658)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்குண்டு

கொடிகாமம் ராமர் கோயிலுக்கு அருகாமையில் உயர்மேட்டு நிலக்காணி 12பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு: நம்பிஜயா, சந்தை வீதி, கொடிகாமம்.
T.P: 0770759634. (91566)

## திருமண சேவை

நோர்வே, கொலண்ட், கனடா, அவுஸ்திரேலியா, லண்டன், ஜேர்மன், பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா மணமகன்களுக்கு உடனடியாக மணமகள்கள் தேவை. 1960-1993 இல் பிறந்த உள்நாடு, வெளிநாடு தகுதியான மணமக்களுக்கு மணமக்கள் உடனடியாகத் தேவை. மற்றும் அழகான, உயரமான, படித்த, நற்குணமான மணமகளுக்கு உடன் உள்நாட்டு, வெளி நாட்டு மணமகன் தேவை.

தொடர்பு: லக்ஸ்மி ஏஜன்ட்
598/2, சக்தி லேன்,
அன்பு வழிபுரம், திருகோணமலை.
T.P: 0775020769 (சி/563382)

# கஜமுகாசுரன் போர்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.அத்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் கஜமுகாசுரன்போர் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்குப் பஞ்சமுக அர்ச்சனையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை பிள்ளையார் கதை நிறைவு பெற்று பஞ்சமுக அர்ச்சனையும், சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

(04-201)

## முதியவருக்குக் காயம்

மரத்தில் இருந்து பிடுங்கிய தேங்காய் வீழ்ந்து முகத்தில் மோதி வயோதிபருக்கு மூக்கும் பல்லும் உடைந்து காயமேற்பட்டது.

கொடிகாமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மு. கந்தையா (வயது - 70) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-207)




## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் குணமாக 05 . 02 . 1952



விண்ணில் செல்வமாக 04 . 01 . 2006

### அமரர் சதாசிவம் குணச்செல்வம்
(ஓய்வுபெற்ற கிராமசேவகர்)
திதி: பஞ்சமி (21.12.2009)

அன்பின் அகராதியாய் அறிவின் திறனொளியாய்
நெஞ்சில் நிறைந்த எம் இனிய அப்பாவே!
ஆண்டுகள் நான்காகிடினும் ஆறிடுமோ எம்துயரம்- நீர்
மாண்டபோதும், உம் நினைவு மாறாது எம் நினைவில்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய். (91661)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சௌபாக்கியநாயகி சுந்தரலிங்கம்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சௌபாக்கியநாயகி சுந்தரலிங்கம் (19.12.2009) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் (பரந்தன், இரசாயனத் தொழிற்சாலை, முன்னாள் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வெற்றிவேலு (கிராமசபைத் தலைவர்- நல்லூர்)-இரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் மகளும் மீசாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி-பதஞ்சலி தம்பதியரின் மருமகளும் நளாயினி, பதஞ்சலிதேவி,ஸ்ரீகணேசன் ஆகியோரின் அன்புத் தாயும் கோகுலன், ராவ், விஜிதா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை 23.12.2009 அன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றொரண்டோ, கனடா.
தொ.பே.: 0014168757136, 416 724 1407. (சி/56306)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து)
## சுன்னாகம்

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தர பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொதுமுகாமையாளர்:** குறி. இல.101:08

சம்பளத் திட்டம்: 11200-14100 / 140x10, 150x10

**தகைமை:**

அ)கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ)கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க.பொ.த.உயர்தரப் பத்திரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02.கணக்காளர்:** குறி. இல.104:09

சம்பளத் திட்டம்: 10950-13650. / 130x10, 140x10

**தகைமை:**

அ)கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு அல்லது உட்துறைக் கணக்காய்வு லிகிதர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது உட்துறைக் கணக்காய்வாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

ஆ) ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ)கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரம்/க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் பாடத்திலான சித்தி அடங்கலாக 03 பாடங்களில் சித்தியும் ஆறு வருடங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான அனுபவம்.

**பொது:** விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் ரூ.10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 04.01.2010**

18.12.2009. (சி/563378)

சி.குமரவேல்,
தலைவர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி தையல்நாயகி கிருஷ்ணசாமி
(தையல் அம்மா)
(ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

மண்ணுலகில் 16.08.1933
ஸ்ரீ வைகுண்டத்தில் 01.01.2009

திதி: பஞ்சமி [21.12.2009]

ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட உம் நினைவலையால்
நீள் தரையில் தவிக்கின்றோம்.

ஆலம் விழுதாகி எமை
அரவணைத்துக் காத்தீரே!
ஓய்வொழிச்சல் எதுவுமின்றி
ஓயாது பாடுபட்டீர்
பூத்துக் குலுங்கும்
புது வசந்தம் தேடி வைத்துவிட்டு
பூமடிந்து போனது போல்
ஓர் நொடியில் போய் ம...

புகழ்பூத்த நும் வாழ்வு
மண்ணுலகில் நீங்கினாலும்
நினைவென்றும் அகலாது
என்றென்றும் எம் நினைவில்
நீங்கா இடம்பிடித்த
தங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நீங்கா நினைவில்:
மகள்,
மருமகன்,

69 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஓய்வுபெற்ற வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கை வங்கி வட பிராந்திய முகாமையாளர் என்.சிவரெட்ணம் மங்களவிளக்கேற்றுவதையும், ஓய்வுபெற்ற மூத்த வங்கியாளர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் சிவரெட்ணத்திற்கு துணைவேந்தர் பொன்னாடை போர்த்துவதையும், யாழ்.இலங்கை வங்கி முகாமையாளர் ஜே.பி.ஆனந்தநடேசன் ஓய்வுபெற்ற வங்கியாளர் எஸ்.விக்னேஸ்வரன் ஆகியோர் இசைநிகழ்ச்சி செய்வதையும் சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி விநோதினியின் ஓரங்க நாடகக் காட்சியையும் மேல் வரிசையிலும்-

மக்கள் வங்கிப் பிரதேச முகாமையாளர் எஸ்.பத்மநாதன், யாழ்.இலங்கை வங்கி ஓய்வுபெற்ற முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன், ஓய்வுபெற்ற வங்கியாளர் ஜே.கோபாலகிருஷ்ணன், சம்பத் வங்கி உதவி முகாமையாளர் ஆர்.குமணன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் கீழ்வரிசையிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# தெருமூடி மடத்தின் பொழி கற்கள் ஒரு போதும் அகற்றப்படாதென அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

பருத்தித்துறை தெருமூடி மடத்தின் தொன்மையான பொழிகற்கள் அகற்றப் படமாட்டாது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

''பருத்தித்துறை தெருமூடி மடத்தின் தொன்மையான பொழிகற்கள் பறிபோய் விடுமோ என மக்கள் கவலை'' எனும் தலைப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளியாகிய செய்தி தொடர்பாக அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பிலே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அரச அதிபரால் அனுப்பப்பட்டுள்ள செய்திக்குறிப்பின் விவரம் வருமாறு:-

கடந்த வியாழக்கிழமை கிடைத்த தகவலின் பிரகாரம் பருத்தித்துறை நகரசபை செயலாளருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, தெருமூடி மடம் திருத்தப்படுவதாகவும் இதன்போது தொன்மையான பொழிகற்கள் அகற்றப் படமாட்டதெனவும், சிமெந்தினால் அமைக்கப்பட்ட நிலம் மட்டுமே திருத்தி அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தனது அலுவலர்களை அனுப்பி இது தொடர்பாக நகரசபை செயலாளருடன் கலந்துரையாடியுள்ளார். ஆகவே அண்மையில் மரபுரிமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் என்ற தலைப்பில் நடைபெற்ற இருநாள்கள் பயிலரங்கில் கலந்துரையாடியதற்கு அமைவாக தொன்மையான சொத்துக்களைப் பாரமரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியத்தருவதுடன், இது விடயமாக நகரசபை செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்-என்றுள்ளது.

அரச அதிபரின் இத்தகைய துரித நடவடிக்கையால் மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதில் ஆர்வம் கொண்டமக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அரச அதிபரின் இத்தகைய நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியதாகும் என்று சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

(04-9)

## திண்மக் கழிவு தொடர்பான நடவடிக்கை விரைவில்

நல்லூர், டிசெ.21

யாழ்ப்பாணத்தில் திண்மக் கழிவுகள் தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் அமுலாக்கம் செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

திருகோணமலை மாநகரசபை உத்தியோகத்தர்களுடனான திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கில் பங்கு பற்றிய பின்னரே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(04-111)

# மக்கள் சேவை கடன் அறவீடு என்பவற்றில் இலங்கை வங்கியின் அச்சுவேலிக்கிளை முன்னிலையில்

## வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் உரை

அச்சுவேலி,டிசெ.21

''இலங்கை வங்கி மக்களின் வாழ்க்கையின் சகல நிலையிலும் உறுதுணையாக நின்று உதவி வருகின்றது. இந்தவகையில் இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை தனது மேலான செயற்பாடுகளை முன்னணியில் நின்று நிறைவு செய்கின்றது. மக்களுக்கான வழங்கல்களைச் சிறப்பாக மேற்கொள்ளும் அதே நேரத்தில் வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் அறவீடுகளையும் மேற்கொள்வதில் இலங்கையில் முதன் நிலையில் உள்ளது.''

இவ்வாறு கூறினார் இலங்கை வங்கியின் வடபிராந்திய பிரதி பொது முகாமையாளர் நடராசா சிவரெட்ணம்.

இலங்கை வங்கியின் அச்சுவேலி கிளை சனிக்கிழமைகளிலும் செயற்படவைப்பது தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு வங்கியின் முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்து என்.சிவரட்ணம் தொடர்ந்து உரையாற்றும் போது:

இலங்கை வங்கியின் செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மக்களின் நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வங்கியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களின் நம்பிக்கையை எடுத்துக்காட்டும் வகையில் அண்மையில் மத்திய வங்கியின் ஆளுநரின் வருகையும் அவருக்கு வழங்கப்பட்ட வரவேற்பும் அமைந்திருந்தது. இந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மையை நான் லண்டனில் தங்கியிருந்த வேளையில் அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்தவகையில் நான் ஓய்வுபெற்ற பின்னரும் வங்கியின் முன்னெடுப்புக்கள் உயர்நிலையில் பேணப்படும் என்ற வலுவான நம்பிக்கையுடன் ஓய்வு பெறவுள்ளேன்.

இலங்கை வங்கி அச்சுவேலிக்கிளையின் தனிப்பட்ட திடீர் வளர்ச்சிக்கும் வாடிக்கையாளரின் ஒத்துழைப்பும் காரணமாக இருப்பதும் முகாமையாளரின் ஆளுமைச் சிறப்பும் சிறந்த முகாமைத்துவமுமேயாகும். இந்த முகாமைத்துவத்துடன் வங்கியின் செயற்பாடுகள் தொடர்ந்து உயர்நிலை பெறவேண்டும். அதற்கு ஏற்றவகையில் சகல வகையான உதவிகளையும் வங்கி மேலிடம் வழங்குவதற்குத் தயாராக உள்ளது-எனக் கூறினார்.

இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றும் போது:

இலங்கைவங்கியின் அச்சுவேலி கிளையின் தேவைகளை அறிந்தவுடனேயே அவற்றை நிறைவு செய்வதற்கு வங்கி மேலிடம் தயாராக உள்ளது. இந்தவகையிலேயே சனிக்கிழமைகளிலும் வங்கியைச் செயற்பட வைக்கவேண்டும் என வாடிக்கையாளரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட கோரிக்கையைக் குறுகியகால அவகாசத்தில் நிறைவு செய்துள்ளோம். இந்த வகையில் எமது செயற்பாடுகளுக்கு வாடிக்கையாளர்கள் உறுதுணையாக உள்ளனர்.

வங்கித் தொழிற்பாடுகளில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கைத் தன்மைதான் வங்கியையும் வளரச்செய்து வாடிக்கையாளர்களையும் வளரச்செய்யும் -எனக்கூறினார்.

(04-11)

# பொறியியல் பட்டப்படிப்புகள் தொடர்பான கருத்தரங்கு யாழ்.நகரில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், குறுகிய காலப் பயிற்சிகளூடாகப் பொறியியல் பட்டப்படிப்பில் இணைந்து கொள்வது தொடர்பாக விளக்கம் அளிக்கும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக் கழக விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் சித்தியடைந்த மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பொறியியல்ப் பிரிவுகளுக்கான பட்டப்படிப்புகளின் முதலாம் வருடப் பயிற்சிநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் நிறுனத்தின் பொறியியல் பீடாதிபதி பேராசிரியர் வி.எஸ்.ராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

(04-14)

# மின்சார வசதி கிடைத்த பின்னரும் கூட மாலையுடன் கலையும் கொட்டடிச் சந்தை

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ். கொட்டடி மீன் சந்தையை இரவு வேளையிலும் செயற்படுத்தும் முகமாக சந்தைக் கட்டடத்திற்கு மின்சார ஒளி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இவ்வாறு மின்சார ஒளியூட்டல் வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னரும் கூட வழமைபோல மாலை ஆறுமணியுடனேயே சந்தை நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துவிடுவதாகப் பொதுமக்கள் பலரும் தெரிவித்தனர்.

மாலை நேரத்தில் மீன்களை வியாபாரிகள் சந்தைக்கு [illegible] சந்தை மாலையுடனேயே கலைந்து விடுவதற்கான காரணம் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(04-224)

# ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் ஆவணங்களில்லாத வாக்காளர்களுக்குத் தற்காலிக அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 2008 ஆம் ஆண்டு வாக்காளிக்கத் தகுதியிருந்தும் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணமில்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி [illegible] ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட [illegible] ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்கள் அனைத்து பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே கடந்த 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவுகள் உள்ளவர்கள் தத்தமது பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும், இது தொடர்பான மேலதிக விவரங்களை கிராம உத்தியோகத்தரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்-என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(04-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சியால் உங்களின் பலன் மாறப்போவது எப்படி?

-வித்யா தருவதைப் படியுங்கள்

**விருச்சிகம்**

தேனீக்களைப் போல் சுறுசுறுப்பாய் இயங்கும் நீங்கள், தேவைப்பட்டால் ஆமைபோல ஓட்டுக்குள் ஒளிந்து வாழ்வீர்கள். தன் உரிமைகளை விட்டுக்கொடுக்காத நீங்கள், அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படமாட்டீர்கள். காயம் ஆறியும், வடு மறையாததைப் போல் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை அவ்வப்போது நினைத்துப்பார்ப் பீர்கள். இதுவரை முயற்சி வீடான மூன்றாம் வீட்டில் அமர்ந்திருந்த குருபகவான் எந்த வேலையையும் முழுசாக முடிக்க விடாமல் தடுத்தாரே! உங்களை நாலாபுறமும் ஓட வைத்தாரே! முயற்சிகளெல்லாம் முழுமையடையாமல் போனதே! இப்பொழுது நான்காவது வீட்டில் அமர்வதால் நீங்கள் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்க வேண்டும்.




உங்கள் ராசிக்கு இரண்டு, ஐந்தாம் வீடுகளுக்குரிய குருபகவான் தன் நட்சத்திரமுள்ள வீட்டில் அமர்வதால் கெடுபலன்கள் குறையும். அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் இருக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவும், அலைச்சலும் இருக்கும். குடும்பத்தில் அவ்வப்போது வாக்குவாதங்கள் முற்றும். ஆகையால் உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். தாயின் உடல்நிலை பாதிக்கும். மருத்துவச்செலவுகள் அதிகரிக்கும். நெடுந்தூர, இரவுநேரப்பயணங்களை தவிர்க்கப்பாருங்கள். வாகன விபத்துகள் வரக்கூடும். சொந்த, பந்தங்களிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள்.

ஆனால் உங்களின் பிரபல யோகாதிபதியான குருபகவான் அதிசாரம் மற்றும் வக்ர கதியில் 04.05.2010 முதல் 06.11.2010 முடிய பூர்வ புண்ணிய வீடான 5ஆம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்வதால் அக்கால கட்டங்களில் எதிலும் வெற்றியுண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் தடையில்லாமல் முடிவடையும். பணத்தட்டுப்பாடு நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லையென்று வாடி வருந்திய தம்பதியருக்கு அழகான வாரிசு உருவாகும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்த வில்லங்கம் விலகும். வழக்குகள் சாதகமாகும். மகளுக்கு திடீரென்று திருமணம் ஏற்பாடாகும். மகனுக்கு இருந்த கூடாத பழக்க வழக்கங்கள் நீங்கும்.

உங்கள் மனைவி, மக்களைப்பற்றி உறவினர்கள், நண்பர்கள் தவறாகச்சொன்னால் அதைநம்ப அவர்களைத் தண்டிக்காதீர்கள். உங்களின் கோபதாபங்களை, கூடாத பழக்க வழக்கங்களை உங்கள் மனைவி சில நேரங்களில் சுட்டிக்காட்டுவார். அதற்காக வருத்தப்படாதீர்கள். பிள்ளைகளை அன்பாக நடத்துங்கள். அவர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை. உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிவார்கள். அசைவ, கார உணவுகளை தவிர்ப்பது நல்லது. நேரந்தவறி சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சொத்து வாங்குவது, விற்பதில் உஷாராக இருங்கள். சிநேகிதர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வெளிவட்டாரத்தில் யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். எந்தப் பிரச்சினைக்காகவும் நீதிமன்றம் போகாமல் லாபமோ, நஷ்டமோ பேசித் தீர்த்துக்கொள்ளப்பாருங்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் யோகா, தியானம் செய்யுங்கள். அண்டை அயலாரை அரவணைத்துப்போங்கள்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்:

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் ராசிநாதனான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் ஓரளவு நிம்மதி கிடைக்கும். புதிய முயற்சிகள் அலைச்சலின் பேரில் வெற்றியடையும். சகோதரர்கள் உதவுவார்கள். பயணங்கள் அதிகரிக்கும். உங்களைப்பற்றி வீண்பழி வந்து நீங்கும்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் தாயின் உடல் நிலை பாதிக்கும். கண், நெஞ்சுவலி வந்து நீங்கும். சிறுசிறு வாகன விபத்துகள் நிகழக்கூடும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் தன பூர்வ புண்ணியாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் குருபகவான் 4ஆம் வீட்டில் நிற்பதால் நல்லதும், கெட்டதும் கலந்து நடக்கும். சிறுசிறு ஏமாற்றங்களைச் சந்திப்பீர்கள். பணவிசயத்தில் கவனமாக இருங்கள். தாயுடன் கருத்து மோதல் வரும். பிரபலங்கள் உதவுவார்கள். கௌரவப்பதவிகள் தேடி வரும். தகுந்த ஏற்பாடின்றி வீடு கட்டும் பணியில் இறங்க வேண்டாம்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய உங்களின் பிரபல யோகாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதுடன் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால் திடீர் பணவரவு, சொத்துச் சேர்க்கை, குழந்தை பாக்கியம், அதிகார பதவி அமையும். வாகனம் வாங்குவீர்கள். திருமணம், கிரகப்பிரவேசமென வீடு களைக்கட்டும் நல்ல வேலை கிடைக்கும்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உள்ள காலகட்டத்தில் குருபகவான் உங்களின் சேவக, சுகாதிபதியான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். தாய்வழியில் சொத்து வரும். முதுகுவலி, வயிற்று வலி நீங்கும். வேற்றுமொழியினர் உதவுவார்கள்.

வியாபாரத்தை விரிவுபடுத்தலாம் என அவ்வப்போது முயற்சி செய்தும் தடங்கல் வந்ததே! மே, ஜூன், செப்ரெம்பர் மாதங்களில் உங்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும். வேலையாள்களிடம் உங்கள் கோபத்தைக் காட்டிக் கொண்டிருக்க வேண்டாம். பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் தேடி வருவார்கள். மருந்து, மரம், பாவனைப்பொருள்கள் வகைகளால் லாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களை பகைத்துக்கொள்ளாதீர்கள்.

உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். மேலதிகாரியுடன் பிரச்சினை வந்து நீங்கும். பணியில் திடீர் இடமாற்றம் உண்டு. குருபகவான் 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் சவால்களை சமாளிக்கும் மனத் தைரியம் கிடைக்கும். மே, ஜூன், செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் புதுவேலை கிடைக்கும். பதவி, சம்பளம் உயரும். சக ஊழியர்களிடமும் சுமுகமான உறவு ஏற்படும்.

கன்னிப் பெண்களே! கெட்ட நண்பர்களின் சகவாசங்களை ஒதுக்கித்தள்ளுங்கள். பெற்றோரின் ஆலோசனையின்றி எந்தப் பெரிய முடிவும் எடுக்க வேண்டாம். திருமணம் தாமதமாக முடியும்.

மாணவ-மாணவிகளே! விளையாட்டில் செலுத்தும் கவனத்தை கொஞ்சம் படிப்பில் காட்டுங்கள். கணிதம், வேதியியல் பாடங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். கலைஞர்களே! எதிர்பார்த்த புது வாய்ப்புகள் தடைப்பட்டு, பின்னர் வரும். சக கலைஞர்களை அனுசரித்துப்போங்கள். விவசாயிகளே! முதல் போகம் நஷ்டமடைந்தாலும் இரண்டாம் போகத்தில் அதிக லாபம் வரும். அரசியல்வாதிகளே! ஆதாரமின்றி யாரையும் விமர்சிக்க வேண்டாம்.

இந்த குருப்பெயர்ச்சி உங்களை சிலநேரங்களில் சிரமப்படுத்தினாலும், மே மாதம் முதல் எதிலும் வெற்றியையும், திடீர் யோகத்தையும் [illegible]

**தனுசு**

பூவோடு ரகசியம் பேசும் காற்றை உணரும் அளவிற்கு மென்மையான இதயம் கொண்ட நீங்கள், பிரச்சினை என்றால் தெருவில் நின்று போராடவும் தயங்கமாட்டீர்கள். இதுவரை உங்களின் தனவீடான 2ஆம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பணப்புழக்கத்தையும், கொஞ்சம் கௌரவத்தையும், குடும்பத்தில் அமைதியையும் தந்த குருபகவான் இப்போது மூன்றாவது வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கிறார். தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படை மாண்டதும் என்று பழைய நூல்கள் கூறுகின்றன.

உங்கள் ராசிநாதனான குருபகவான் நான்காம் வீடான சுகவீட்டிற்கும் அதிபதியாகிறார். அப்படிப்பட்டவர் மூன்றாம் வீட்டில் சென்று மறைவதால் நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு தவறான பாதையில் செல்ல வேண்டாம். பெரியவர்கள், அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் காதில் போட்டுக் கொள்ளுங்கள். குடும்பத்தில் சலசலப்பு களும், வாக்குவாதங்களும் வரத்தான் செய்யும். யாரையும் அநாவசியமாக வீட்டிற்குள் அழைத்து வரவேண்டாம். உறவினர்கள், நண்பர்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளாதீர்கள். இளைய சகோதரர்களின் தனிப்பட்ட விஷயங்களில் தலையிட வேண்டாம். யாருக்கும் பிணை, சிபார்சு போன்றவற்றில் கையெழுத்திடாதீர் கள். பங்குகள், அதிஷ்டலாபத்தில் ஏமாற்றம் ஏற்படும். அன்பளிப்புகளைத் தவிர்க்கவும்.

உங்களின் ஏழாவது வீட்டை குரு பார்ப்பதால் மறைந்திருந்த திறமைகள் வெளிப்படும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். கணவன்-மனைவிக் குள் சச்சரவுகள் வந்தாலும், பாசத்திற்கும், பரிவுக்கும் பஞ்சமிருக்காது. தெய்வபக்தி கூடும். பஜனை, கதாப்பிரசங்கங்களில் மனம் லயிக்கும். மனைவிவழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். குருபகவான் உங்களின் ஒன்பதாவது வீட்டைப்பார்ப்பதால் செலவுகளை ஓரளவு கட்டுப்படுத்துவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். தந்தையுடன் அடிக்கடி கருத்துமோதல்கள் வந்ததே! அது இனி குறையும். பிள்ளைகளிடம் இருந்த சில கெட்ட பழக்கங்கள் நீங் கும். மகனை, விரும்பிய கல்விப்பிரிவில் சேர்ப்பீர்கள். மகளுக்கு பல இடங்களில் வரன் பார்த்து அலுத்துப் போனீர்களே! இப்பொழுது உங்கள் வசதிக்கும், அந்தஸ்துக்கும் தகுந்த மணமகன் அமைவார். குரு 11ஆவது வீட்டைப்பார்ப்பதால் பல நாள்களாக இழுத்தடித்துக் கொண்டிருந்த பிரச்சினையெல்லாம் ஓயும். அவர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொண்டு நெருக்கமாவீர்கள். மூத்த சகோதரர் உதவுவார். சொத்துப்பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வாகனத்தை இயக்கும்போது கையடக்கத் தொலை பேசியில் பேசவேண்டாம். சிறு விபத்துகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.




குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்:

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் பூர்வ புண்ணியாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் மனதில் தெளிவு பிறக்கும். எதிர்பார்த்த வகையில் உதவி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் நிம்மதியுண்டாகும்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் முக்கிய முடிவுகளைக் கவனமாக எடுங்கள். வீண் விவாதங்கள், மனப்போராட்டங்கள் அதிகரிக்கும். தாய்க்கு மருத்துவச் செலவுகள் [illegible] சளித் தொந்தரவு, வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள், வீண்பழி வந்து நீங்கும்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் ராசிநாதனும், சுகாதிபதியுமான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் தைரியம் பிறக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சலும், செலவும் இருக்கும். உத்தியோகத்தில் அலைகழிக்கப்படுவீர்கள்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் குரு அமர்வதால் பெருமை தரக்கூடிய சம்பவம் நிகழும். பணப்புழக்கம் ஓரளவு இருக்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உள்ள காலகட்டத்தில் தன, சேவகாதி பதியான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் செலவுகள், திடீர் பயணங்கள், வயிற்று வலி, குடும்பத்தில் வாக்குவாதங்கள், பார்வைக்கோளாறு, வெளிவட்டாரத்தில் சிறுசிறு பிரச்சினைகள், ஏமாற்றங்கள் வரக்கூடும்.

வியாபாரத்தில் மற்ற வியாபாரி களைப் பார்த்து அதிக முதலீடு களைப் போட்டு நஷ்டப்படாதீர்கள். வருங்கால சந்தை நிலைவரத்தை கவனத்தில் கொண்டு செயல்படுங்கள். வேலையாள்களுடன் அனுசரித்துப் போங்கள். தேங்கிக்கிடந்த பொருள்க்ளை போராடி விற்பீர் கள். வாடிக்கையா ளர்களிடம் கடுமையாகப் பேசவேண்டாம். செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்கள் சாதகமாக இருக்கும். கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் உண்டு. பங்குதாரர்களை அரவணைத்து செல்லப்பாருங்கள். உணவு, பாவனைப் பொருள்கள், உதவு தொகை வகைக ளால் ஆதாயமடை வீர்கள்.

உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் கருத்து மோதல்கள் வெடிக்கும். ஆனாலும், உங்களை நம்ப முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்கள் உங்களை மட்டம் தட்டிப்பேசுவார்கள். அவர்களிடம் கொஞ்சம் கவனமாகப் பழகுங்கள். சிலர் வேண்டா வெறுப்பாக இடம்மாற வேண்டிவரும். அடிப்படை உரிமை வேண்டி நீதிமன்றம் செல்ல வேண்டி வரும். ஜூன், ஜூலை, ஒக்ரோபர் மாதங்களில் வேலைச்சுமை குறையும்.

கன்னிப் பெண்களே! காதல் வலையில் சிக்க வேண்டாம். உங்களுக்கு பிடிக்காதவர்கள் அன்பாகப் பேசினாலும் ஒதுக்கித் தள்ளுங்கள். இரும்பு, கல்சியச் சத்து குறையும். பழம், கீரை வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாணவர்களே! வகுப்பறையில் அரட்டை வேண்டாம். தெரியாதவற்றை தயக்கமில்லாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உயர்கல்வியில் கூடுதல் அக்கறை எடுக்காவிட்டால் பின்னர் வருத்தப்பட வேண்டியது வரும்.

கலைஞர்களே! சின்னச் சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பெரிய நிறுவன வாய்ப்புகள் தடைபட்டு வரும்.

விவசாயிகளே! வங்கிக்கடனுதவி கிடைக்கும். நவீனரக உரங்களால் விளைச்சல் இரட்டிப்பாகும்.

அரசியல்வாதிகளே! மேலிடத்தை அனுசரித்துப்போங்கள். உட்கட்சிப்பூசலில் தலையிடாதீர்கள். சகாக்கள் சிலர் உங்களை குறை சொல்லத்தான் செய்வார்கள்.

இந்த குருப் பெயர்ச்சி எதிர்பார்த்ததை தாமதமாக்கினாலும், விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் விட்டதைப் பிடிக்க வைக்கும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தெலுங்கானா பிரச்சினையில் மத்திய அரசின் முடிவு அடுத்தவாரம்

## இணையமைச்சர் புரந்தேஸ்வரி தகவல்

விசாகப்பட்டினம், டிசெ. 21

தனித் தெலுங்கானா மாநிலம் குறித்து அடுத்த வாரம் மத்திய அரசு முடிவை அறிவிக்கலாம் - என்று மத்திய இணை அமைச்சர் புரந்தேஸ்வரி தெரிவித்தார்.

அந்தவகையில் திங்களன்று அல்லது செவ்வாய்க்கிழமை மத்திய அரசு தனது முடிவை அறிவிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த ஆந்திரத்தை வலியுறுத்தி விசாகப்பட்டினத்தில் காலவரையின்றி உண்ணாவிரதம் இருந்து வருபவர்களை புரந்தேஸ்வரி கடந்த சனிக்கிழமை சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தெலுங்கானா தனி மாநில விவகாரம் குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கருத்து தெரிவித்தார். இதற்கு தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது அர்த்தமல்ல. தனித் தெலுங்கானா மாநிலத்துக்கான ஆதரவு மற்றும் எதிர்ப்பை மத்திய அரசு கருத்தில் கொண்டு பரிசீலித்து வருகிறது என்றுதான் அர்த்தம்.

இதனால் உள்துறை அமைச்சரின் கருத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை.

தனித் தெலுங்கானா மாநிலம் உருவாக்குவது தொடர்பாக கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பிரணாப் முகர்ஜி தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. ஆனால் அந்த குழுவால் தனித் தெலுங்கானா விவகாரத்தில் கருத்தொற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. இதையடுத்து தனித் தெலுங்கானா விவகாரம் கிடப்பில் போடப்பட்டது.

இந்நிலையில் தற்போது மீண்டும் அந்த கோஷம் கிளம்பியுள்ளது. தற்போதும் தனி. தெலுங்கானாவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆந்திரத்தைப் பிரிப்பதை லாலு பிரசாத் தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தளம், முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் எதிர்த்து வருகின்றன - என்றார்.

# இலங்கை மீனவர் 10 பேர் கைது

தண்டையார்பேட்டை, டிசெ. 21

இந்தியக் கடற்பகுதியில் நுழைந்து மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர மாநிலம், கிருஷ்ணாபட்டினம் அருகே கடலோரப் பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இந்தியக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த 2 இலங்கை படகுகளை மடக்கிப் பிடித்தனர்.

அதிலிருந்த 10 இலங்கை மீனவர்களை சுற்றிவளைத்தனர். பின்னர் அவர்களை, காசிமேடு மீன்பிடித்துறை பொலிஸாரிடம் கடலோரப் பாதுகாப்பு படையினர் ஒப்படைத்தனர்.

## இந்தியச் செய்திகள்

# பூமிக்கு அடியிலிருந்து கிளம்பிய புகை; புதுகை அகதிகள் முகாமில் பரபரப்பு!

அரிமழம், டிசெ. 21

புதுகை அருகே அகதிகள் முகாமில் பூமிக்கு அடியில் இருந்து புகை மண்டலம் கிளம்பி வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் லேனாவிலக்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம் உள்ளது. இங்கு 324 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இதில் குணரத்தினம்(45) என்பவரது வீட்டின் பின்புறம் காலியாக உள்ள இடத்தில் கடந்த வெள்ளியன்று நள்ளிரவு பூமிக்கு அடியில் இருந்து புகை வந்தது.

எர்த் வயரில் மின் கசிவு ஏற்பட்டு புகை வந்து இருக்கலாம் என குணரத்தினம் நினைத்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலையிலும் பூமிக்கு அடியில் இருந்து தொடர்ந்து புகை வந்து கொண்டே இருந்ததால் அதிர்ச்சி அடைந்த குணரத்தினம் இது குறித்து நமணசமுத்திரம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

அதன்பேரில் பொலிஸாரும், புதுக்கோட்டை கோட்ட தீயணைப்பு அலுவலர் நந்தகோபால் தலைமையில் தீயணைப்பு படையினரும் விரைந்து வந்து புகை வந்த இடத்தில் பொக்ளின் இயந்திரம் மூலம் தோண்டினர். அப்படியும் புகை வருவது நிற்கவில்லை. பின்னர் தண்ணீரை பீய்ச்சி அடித்தனர். இதனால் நீண்ட நேரத்திற்கு பிறகு புகை வருவது நின்றது.

பூமிக்கு அடியில் இருந்து புகை வந்தது எதனால் என்று தெரியவில்லை. புகை வந்த இடத்தில் புதுக்கோட்டை புவியியல் ஆராய்ச்சி நிபுணர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.

# காங்கிரஸ் எம்.பியின் தலைக்கு ரூ.50 லட்சம்

## தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி அறிவிப்பு

தெலுங்கானாவுக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கும் ராஜகோபால் எம்.பியின் தலையைக் கொண்டு வருவோருக்கு ரூபா 50 லட்சம் பரிசு வழங்கப்படும் - என்று தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியின் மண்டல தலைவர் மணிபால் ரெட்டி அறிவித்துள்ளார்.

ஆந்திராவைப் பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 5 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் விஜயவாடா காங்கிரஸ் எம்.பி. ராஜகோபாலின் உடல் நிலை மோசமானதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு நிம்ஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மணிபால் ரெட்டியின் அறிவிப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

தெலுங்கானாத் தனி மாநிலத்திற்காக நாங்கள் பல ஆண்டுகளாக போராடி வருகிறோம். இந்தப் போராட்டத்திற்கு இப்போது தான் வெற்றி கிடைத்துள்ளது.

இதைத் தடுக்க உண்ணாவிரதம் இருக்கும் எம்.பி. ராஜகோபாலை சும்மா விடமாட்டோம். அவரின் தலையைக் கொண்டு வந்தால் ரூபா 50லட்சம் பரிசு தருவோம்.

தெலுங்கானாவுக்கு எதிராகப் போராடும் அனைவருக்கும் எங்கள் கட்சித் தொண்டர்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் - என்றார்.

மணிபால் ரெட்டியின் இந்த மிரட்டல் குறித்து மனித உரிமை ஆணையத்திடம் காங்கிரஸ் முறைப்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து விசாரித்த உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி ஆகியோருக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந் நிலையில் தெலுங்கானா எதிர்ப்புப் போராட்டங்கள் 10 ஆவது நாளாகத் தொடர்ந்து வருகின்றன. இதனால் ராயசீமா, கடலோர ஆந்திராவில் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், சட்டத்தரணிகள் போராட்டம் காரணமாக பல இடங்களில் வன்முறை தொடர்ந்து வருகிறது. பஸ், ரயில் போக்குவரத்து தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் 10 ஆவது நாளாக முழு அடைப்பு நடப்பதால் அத்தியாவசிய பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விலைவாசியும் மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது.

# ஆவணக் காப்பகத்தில் உள்ளது ஹிட்லரின் மண்டை ஓடுதான்

## ரஷ்யா திட்டவட்டம்

மாஸ்கோ, டிச. 21

''ரஷ்யாவில் அமைந்துள்ள தேசிய ஆவண காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள தலையில் துளையுள்ள மண்டை ஓடு, சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லருடையது. அதுவே, ஹிட்லரின் தற்கொலைக்கான ஒரே ஆவண சாட்சி'' என ரஷ்ய அரசு வலியுறுத்தியுள்ளது.

ரஷ்யாவின் ஆவண காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள ஹிட்லரின் மண்டை ஓட்டை மரபணுப் பரிசோதனை செய்த அமெரிக்க விஞ்ஞானிகள், ''அது 40 வயதுடைய ஒரு பெண்ணின் மண்டை ஓடு'' என முன்னர் தெரிவித்திருந்தனர்.

ஆனால், ''ரஷ்யாவின் ஆவணக் காப்பகங்களில் பாதுகாத்துவரும் மண்டை ஓடு மற்றும் தாடை எலும்பு ஆகியவைதான் நாசி தலைவராக இருந்த அடால்ப் ஹிட்லரின் தற்கொலைக்கான ஒரே ஆதாரம்'' என மாஸ்கோவில் அமைந்துள்ள பெடரல் பாதுகாப்புச் சேவை ஆவண காப்பகத்தின் தலைமை ஆவண காப்பாளரான லெப்டினன்ட் ஜெனரல் வாசிலி கிரிஸ்டோபரோவ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஆவணக் காப்பகத்தில் ஹிட்லரின் மண்டை ஓடு எனக் குறிப்பிடப்படும் இந்த மண்டை ஓடு, கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அவரது தாடை எலும்புகள், அவரின் பல் தொடர்பான ஆவணங்கள் ஆகியவை ஹிட்லருடையவை என உறுதி செய்யப்பட்டாலும், அவை ஹிட்லருடையவை என்பதற்கு எவ்வித மரபணு சான்றும் கிடையாது. அதனால் அவை பெடரல் பாதுகாப்பு சேவை மையத்தின ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை.

''கடந்த 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி ஹிட்லர் சயனைட் அருந்தியதோடு, தன் தலையில் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அதன் பின், பெர்லினில் அவரின் சிதைவுற்ற உடல் கைப்பற்றப்பட்டது. இந்த இரண்டு உடல் பாகங்களும் ஹிட்லருடையவைதான்'' என ரஷ்யா தொடர்ந்து கூறி வருகிறது.






# லண்டனில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித் திட்டம்

## கண்காணிப்புப் பணிகள் தீவிரம்

லண்டன்,டிசெ. 21

மும்பையில் தீவிரவாதிகள் புகுந்து வெறித் தாக்குதல் நடத்தியது போல, அடுத்த வருட ஆரம்பத்தில் லண்டனில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர் என ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

லண்டன் நகரிலுள்ள சில முக்கிய தொழிலகங்களை குறிவைத்து மும்பை பாணியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளமையை அடுத்து, லண்டனிலுள்ள தீவிரவாதத் தடுப்புப் பொலிஸார் கண்காணிப்புப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் முக்கியமான 'ஜிகாதிஸ்ட்' இணையத்தளத்தில் சர்ச்சைக்குரிய விடயங்களும் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமையை பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

லண்டனிலுள்ள இரவு களியாட்ட விடுதிகள், விளையாட்டு மையங்கள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றை குறிவைத்து தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என கணிக்கப்படுகிறது.

எவ்வித சந்தர்ப்பத்தையும் எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் லண்டன் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# தாய்வானில் நிலநடுக்கம்

ஹுவாலீன்,டிச. 21

தாய்வானில் சனிக்கிழமை இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் ஆழிப்பேரலை ஏற்படும் அபாயம் இல்லை என பூகம்பவியல் ஆய்வு மையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெளிவுபடுத்தியுள்ளது.

தாய்வானின் கிழக்கே ஹுவாலீன் நகரின் கடல்பகுதிக்கு அப்பால் 15 மைல் தொலைவை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என தாய்வானின் மத்திய வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் தாக்கம் ரிச்டர் அளவில் 6.8 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் தலைநகரான தைபே பகுதியிலும் வலுவாக உணரப்பட்டது.

''உள்ளூர் நேரப்படி சனிக்கிழமை இரவு 9 மணியிலிருந்து 20 நிமிடங்கள் வரை தொடர்ந்து பல முறை அதிர்வுகள் ஏற்பட்டன. இவற்றால் கட்டடங்கள் அதிர்ந்தன. பொதுமக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டது'' என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

''சில இடங்களில் கட்டட சுவர்கள் இடிந்து சிலர் காயமடைந்தனர். பெரியளவிலான பாதிப்புகள் ஏற்பட்டதற்கான தகவல்கள் இல்லை. நிலநடுக்கத்தால் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன'' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சனிக்கிழமை நள்ளிரவில் ஆழிப்பேரலை ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டு என கூறப்பட்டது. ஆனால், ஆழிப்பேரலை அபாயம் இல்லை என பூகம்பவியல் ஆய்வு மையம் நேற்றுக்காலை தெளிவுபடுத்தியுள்ளது.


# மரண அறிவித்தல்

## இராசம்மா வல்லிபுரம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா வல்லிபுரம் அவர்கள் நேற்று (20.12.20009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லத்துரை (கனடா), காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் தம்பிராசா (கனடா), நடராஜா, சரஸ்வதி (கனடா), செல்வரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. கலைவாணி, கலாராணி (கனடா), வாசவன் (கொழும்பு), மோகன் (ஜேர்மனி), ஆதவன், உசாயினி (ஜேர்மனி), தசவரதன் (கனடா), Dr.கயல்விழி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.இராமநாதன், மயில்வாகனம் (கனடா), சாந்தி (கொழும்பு), கமலலோஜினி (ஜேர்மனி), புவனேஸ்வரி, செல்லத்தம்பி (ஜேர்மனி), சுதாயினி (கனடா), அழகேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரந்தாமன், பிரகலாதன், பிரணவி, மைத்ரேயி, துசாந்தன், ஸப்னா, துலக்சன், துளசி, துஷிகா, மதன், லக்சனா, லவீன், கவின்கோ, சித்தன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஶ்ரீராமின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(91677)

தகவல் :
பேராசிரியர் கலைவாணி ராமநாதன்
(மகள்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனிக்குப் பதிலாக யார் அணித் தலைவர்? தெரிவு செய்வதில் இழுபறிநிலை இருந்ததாம்

## இறுதியில் ஷேவாக்கின் பெயரை அறிவித்தது இந்திய கிரிக்கெட் சபை

நாக்பூர், டிசெ.21

இலங்கைக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி பந்து வீசுவதில் கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டமையால் அணித்தலைவர் டோனிக்கு 2 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அணித்தலைவர் பொறுப்பு ஷேவாக்கிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-இலங்கை கிரிக்கெட் அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2ஆவது ஒரு நாள் போட்டி கடந்த வெள்ளியன்று நாக்பூரில் பகல்-இரவு ஆட்டமாக நடந்தது. இந்தியா நிர்ணயித்த 302 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி விரட்டிய, இலங்கை அணி 5 பந்துகள் மீதமிருக்கையில் இலக்கை எட்டி 'திரில்' வெற்றியை ருசித் தது. அத்துடன் தொடரையும் 1-1 என்ற கணக்கில் சமனுக்குக் கொண்டு வந்தது.

இந்தப் பரபரப்பான ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட தாமதமாக முடிந்திருந்தது. இந்த விடயம் ஐ.சி.சியின் கவனத்துக்கும் சென்றது. இறுதிக் கட்டத்தில் போட்டி பதற்றமான நிலையை எட்டியமையால், இந்திய அணியின் தலைவர் டோனி பந்துவீச்சாளர்கள் மற்றும் களத்தடுப்பாளர்களுடன் களநிலைமை குறித்து அடிக்கடி ஆலோசித்தார். மேலும் வேகப் பந்து வீச்சாளரான சஹீர்கானும் சக பந்து வீச்சாளர்களுக்கு சில சமயம் ஆலோசனைகளை வழங்கினார். இவ்வாறு இந்திய அணி பந்துவீச்சில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட 3 ஓவர்கள் தாமதம் செய்தமையானது. ஐ.சி.சியின் போட்டி நடுவரான ஜெப் குரோவ் நடத்திய விசாரணையில் தெரியவந்தது. இந்த விசாரணையில் டோனி, பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் மற்றும் கள நடுவர்கள் மரைஸ் எராஸ்மஸ், ஷவிர் தாராப்பூர், 3ஆவது நடுவர் சஞ்சய் ஹஸாரே ஆகியோர் பங்கேற்றனர்.

விசாரணை முடிவில் இந்திய அணி, பந்து வீசுவதற்காகக் கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டமையைக் கணக்கில் கொண்டு அணித்தலைவர் என்ற முறையில் டோனிக்கு 2 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என ஜெப்குரோவ் அறிவித்தார்.

இந்திய அணியின் மற்ற வீரர்களுக்குப் போட்டிக் கட்டணத்திலிருந்து தலா 40 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

3ஆவது மற்றும் 4ஆவது போட்டிக்கான இந்திய அணி வருமாறு:-

ஷேவாக் (அணித்தலைவர்), கவுதம் கம்பீர், சச்சின் டெண்டுல்கர், யுவராஜ்சிங், தினேஷ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, ஹர்பஜன் சிங், சஹீர்கான், ஆஷிஷ் நெஹ்ரா, இஷாந்த் ஷர்மா, விராத் ஹோக்லி, சுதீப் தியாகி, பிரவீன் குமார் மற்றும் பிரக்யன்ஓஜா.




## முதல் தர கிரிக்கெட்டிலிருந்து சௌரவ் கங்குலி ஓய்வு!

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கடந்த நவம்பர் மாதம் ஓய்வு பெற்ற இந்தியாவின் சிறந்த முன்னாள் அணித்தலைவரான கங்குலி, இந்தியாவில் இந்தியாவில் நடந்த உள்ளூர் போட்டியான ரஞ்சி கிண்ணத் தொடரில் பெங்கால் அணிக்காக டில்லி அணிக்கு எதிராக கடைசிப் போட்டியை விளையாடி முதல் தர கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 2010 கிரிக்கெட் தொடருக்கான கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கங்குலி, பயிற்சியாளர் வட்மோருடன் கூடுதலாகவே பணியாற்ற வேண்டியிருப்பதால் உள் நாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற எண்ணியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

டில்லி அணிக்கு எதிராக கடைசியாக கங்குலி 152 ஓட்டங்களை விளாசியிருந்தார். இந்த வருடத்தில் அவரது சராசரி 62 ஓட்டங்கள் என்பது குறிப்படத்தக்கது.

# மே.இ. தீவுகளுடனான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது ஆஸி.



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக பேர்த்தில் நடந்த டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடி வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

பேர்த் டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று மேற்கிந்தியத் தீவு அணியின் எஞ்சியிருந்த ஒரே ஒரு விக்கெட்டைக் கைப்பற்றி வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்புடன் ஆஸ்திரேலியா களமிறங்கியது.

அதே தருணத்தில் வெற்றிக்குத் தேவையான 51 ஓட்டங்களை எடுக்கும் உத்வேகத்துடன் ரோச்-டோன்ஞ் ஜோடி களமிறங்கியது. அதிரடியாக விளையாடிய டோஞ்ச் 24 ஓட்டங்களைச் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். மறுமுனையில் 17 ஓட்டங்களை எடுத்த நிலையில் போலிங்சரின் பந்துவீச்சில் ரோஜ் ஆட்டமிழந்தமையால், ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

ஆஸ்ட்ரேலியப் பந்து வீச்சாளர்களில் போலிஞ்சர், ஜோன்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும், வோட்ஸன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இத்தொடரின் முதல் இன்னிங்ஸில் அதிரடிச் சதம் விளாசிய மேற்கிந்திய அணித் தலைவர் கிறிஸ் கெய்ல் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் விருதுகளைத் தட்டிச் சென்றார்.

இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட தொடரில், ஏற்கனவே ஒரு வெற்றியுடன் இருந்த ஆஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இரண்டாவது போட்டி சமனிலையில் முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வெற்றியைத் தக்கவைப்பாரா அணித்தலைவர் சங்கக்கார!

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று பகல்-இரவு ஆட்டமாக இந்தியாவில் நடைபெறுககிறது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் விளையாடி வருகிறது.

5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இரண்டு போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது.

இந்நிலையில் இன்று மூன்றாவது போட்டி நடைபெறுகிறது.

இரண்டு அணிகளிலும் முக்கியமான வீரர்கள் களமிறங்க முடியாத நிலையில் இரு அணிகளும் மோதுகின்றன.

இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணி முன்னிலை நோக்கிச் செல்லும்.

முன்னர் நடந்துமுடிந்த இரண்டு போட்டிகளிலும் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்கவில்லை. அப்போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் உற்சாகமாகக் காணப்பட்டனர்.



இந்தியாவுக்கு இரண்டாவது போட்டியில் ஆப்பு வைத்த இலங்கை அணி இன்றைய போட்டியிலும் அந்த வெற்றித் தாக்கு தலைத் தொடருமாயின் முன்னிலை பெறும். அதேவேளை; இந்திய அணி மீண்டும் தனது வெற்றியைப் பதிவுசெய்யவும் கூடும்.

இன்றைய போட்டியில் சங்கக்காரா தனது வியூகங்களை இந்திய அணியின் தற்போதைய தலைவரான ஷேவாக்குக்கு எதிராக வகுத்து வெற்றியைத் தக்கவைப்பாரா அல்லது - ஷேவாக் இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்கிறாரா என்தை - இன்றைய போட்டியில் பொறுத்திருந்து பார்ப்போம்.

# நாடு திரும்பினார் மத்யூஸ்!

இலங்கை அணியின் வீரர் மத்யூஸ் காயம் காரணமாக இன்றைய போட்டியில் விளையாட மாட்டார் எனத் தெரியவருகிறது.

இந்தியாவுடனான இரண்டாவது போட்டியின்போது காயம் அதிகமாகியிருந்தமையினால் அவர் இன்றைய போட்டியில் பங்கேற்க முடியாமல் போயுள்ளது. அத்துடன் அவர் நேற்றைய தினமே இலங்கை வந்தடைந்துள்ளார் எனத் தெரியவருகிறது

## ஐக்கிய தேசியக் கட்சியின்அலுவலகம் மீது தாக்குதல்

அத்தனகல தேர்தல் தொகுதிக்குட்பட்ட திகரியண்மல்வத்த மற்றும் வியங்கொட ஆகிய பகுதிகளிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரின் அலுவலகங்கள் மீது இனந்தெரியாதவர்களால் நேற்றுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் குறித்துப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது என்றும், அந்த முறைபபாடுகள் குறித்து எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் பொலிஸார் முன்வரவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார். (சி)

# கிளிநொச்சிக்கு வாக்களிக்கச் செல்ல விசேட போக்குவரத்து வசதி

## இடம்பெயர்ந்தோர் விண்ணப்பிக்க 24 இறுதி நாள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக் களிப்பு நிலையங்களுக்குச் செல்ல விசேட கோக்குவரத்து வசதி செய்யப்படும். கரைச்சி, பூநகரி ஆகிய இடங்களில் இந்த வாக்க ளிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் தங்கியுள்ள வாக்காளர்கள், கிளிநொச்சியில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க போக்குவரத்து வசதிகள் செய்யப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை, இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 24 ஆம் திகதி ஆகும். எனவே, விண்ணப்பங்களை அதற்கு முன் நலன்புரிநிலையப் பொறுப்பாளர் ஊடாகத் தாமதமின்றி அனுப்பிவைக்குமாறு இடம்பெயர்ந்த வாக்காளர்கள் கேட்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த வாக்காளர்களே இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டியவை [illegible] கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அன்றையதினமே யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகத்தில் நேர்டியாகக் கைய ளித்தல் வேண்டும் - என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ)

## மரண அறிவித்தல்

### சண்முகம் சிவதாசன்

(ஓய்வுபெற்ற தபாலதிபர், தெல்லிப்பழை மேற்கு)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் சிவதாசன் நேற்று(20.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்செனறவர்களான சிற்றம்பலம் சண்முகம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மூளாயைச் சேர்ந்த சின்னப்பு மயில்வாகனம் (J.P.)-மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மரும கனும் காலஞ்சென்ற சிவராஜ லட்சுமி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி புவனேஸ்வரி குகதாசன், தர்மதாசன் மற்றும குகதாசன் (உடுப்பிட்டி), ஜெயதாசன்(இருபாலை) ஆகியோரின் சகோதரரும் குமாரராஜன் (அவுஸ்திரலியா), சிவராஜேஸ்வரிதேவி (உடுப்பிட்டி), சின்னப்புராஜா (அவுஸ்திரேலியா), சிவ யோக லட்சுமிதேவி(கொழும்பு) மற்றும் அமரர்களான முருக ஜோதிராஜா சிவபாக்கியலட்சுமிதேவி, சிவானந்தலட்சுமி தேவி, அமரர் குகதாசன் மற்றும் தேவி, கிருபாசக்தி, சுலோஜனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய்,
சுழிபுரம். (91621)

தகவல்: ச.குகதாசன்,
ச.ஜெயதாசன்(சகோதரர்கள்)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் கனகசபாபதி



தெணியம்மன் வீதி, திருநாவலூர், புலோலி மேற்கைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் கனகசபாபதி 18.12.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் கனகசபாபதியின் அன்பு மனைவியும் சிவ ஞானச் செல்வம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்), அருளானந்தம் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), செல்வநாயகம் (லண்டன்), செல்வராணி, சதானந்தம் (லண்டன்), சிவானந்தம் (லண்டன்), விவேகானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவ சக்தி, வசந்தாதேவி (ஆசிரியர், வேலாயுதம் ம.வி.), நிர்மலா (லண்டன்), வி.சிவராமன் (பொறியியலாளர்), மேகலா (லண்டன்), கீதா(லண்டன்), தனுஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அனோஜன், யோகினி, தினேஸ், பவுணா, மாதுமை, சிவானி, அனோஜா, லவூரன், லவுசா, சுஜன், சிலோசினி, வரூஷன், கீர்த்திகா, கீதினி, சகானா,கபிஷன், தஜ்னி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வஇல்லம்"
தெணியம்மன் வீதி, புலோலி மேற்கு,
திருநாவலூர், பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோர்த் லங்கா ஐ.ஐ.ரி. நிறுவனத்தில் பட்டப்படிப்பை முடித்து கம்போடியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற பட்டதாரிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் பட்டம்பெற்றவர்களுக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர். பி.விக்னேஸ்வரன் ஆகியோர் விருது வழங்குவதையும் விருதுபெறும் மாணவ, மாணவிகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

# யாழ்.- வவுனியா சேவையில் ஈடுபட இதுவரை 27 மினிபஸ்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக்குமிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு இதுவரை 27 மினி பஸ்களுக்கு வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது'விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக்கும் இடையிலான தனியார் மினிபஸ் சேவை கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரால் 113 மினி பஸ்களின் விவரம் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் மினிபஸ்கள் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு முதற்கட்டமாக 30 மினி பஸ்கள் யாழ். - வவுனியா சேவைக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 27 மினி பஸ்களுக்கு சேவையில் ஈடுபடுவதற்கான விசேட வழி அனுமதிப்பத்திரங்கள் யாழ்.மோட்டார் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 27 மினி ப்ஸ்களும் தற்போது யாழ் - வவுனியா பயணிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

விரைவில் மேலும் சில பஸ்களுக்கு வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-04-09)

# பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கை வருகை; மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

கொழும்பு, டிசெ. 21

இலங்கை அரசை மனித உரிமை மீறல்களுக்காக பிரிட்டன் அரசு கடுமையாக விமர்சித்து ஓரிரு தினங்களில் அந்த நாட்டின் கலாசார ஊடகத்துறை இணையமைச்சர் இலங்கைக்கு கிறிஸ்மஸ் விடுமுறை சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளமையை மனித உரிமை அமைப்புகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் இலங்கை அடுத்த பொதுநலவாய உச்சிமாநாட்டை நடத்துவதைத் தடுத்து நிறுத்தினார். அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் கடந்த வாரம் பொதுச்சபையில் இலங்கை நிலைவரம் குறித்துக் கவலை தெரிவித்தார்.

எனினும், பிரிட்டனின் கலாசார ஊடகப் பிரதிமைச்சர் பென் பிரிட்சோ வெள்ளிக்கிழமை இலங்கைக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

பிரிட்டனின் உல்லாசப் பயணத்துறை இணை அமைச்சராகவும் உள்ள பிரிட்சோ இலங்கையில் விடுமுறையைக் கழிப்பதன் மூலம் ஏன் அந்த நாட்டிற்கு ஆதரவளிக்கின்றார் என மனித உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

தமிழ் மக்களை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைத்திருக்கின்றமையைக் கண்டித்து பிரிட்சோ பகிரங்க அறிக்கையொன்றை வெளியிட வேண்டுமென சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் அமைச்சருக்கு இலங்கை முழுவதும் உல்லாசப் பயணம் மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள அதேவேளை, அந்த நாட்டின் பிரஜைகள் தொடர்ந்தும் ஆயிரக்கணக்கில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பிரிட்சோ இலங்கை முழுவதும் செல்ல வேண்டும். பின்னர் தன்னைப் போல் சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானவர்களின் நிலை குறித்துப் பகிரங்கமாக அதிருப்தி வெளியிடவேண்டும் என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கை இயக்குநர் ஜேம்ஸ் ரொஸ் தெரிவித்துள்ளார்.

பிரிட்சோ இலங்கைக்குச் சென்றால், பிரிட்டிஷ் அரசு அந்த நாட்டின் மனித உரிமை நிலைவரம் குறித்துக் கொண்டுள்ள கவலைகள் குறித்துப் பகிரங்கக் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (சி)

# சுகாதாரத்துறை ஊழல்களை மூடி மறைக்கவே வைத்தியர்களுக்கு அலரிமாளிகையில் விருந்து

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, டிசெ.21

சுகாதாரத்துறையில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை மூடி மறைப்பதற்காக ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ வைத்தியர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளை அலரிமாளிகைக்கு அழைத்து விருந்து வைக்கின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றிய ஐ.தே.கவின் எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்தன இது தொடர்பாக மேலும் கூறி யவை வருமாறு:-

இலங்கையின் சுகாதாரத்துறை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்துகொண்டு வருகின்றது. தரம் குறைந்த மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்து சுகாதார அமைச்சு மனித உயிர்களுடன் விளையாடுகின்றது.

தரம் குறைந்த மற்றும் காலாவதியான மருந்துப் பொருள்களின் பாவனை காரணமாக இப்போது நோயாளிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

மருந்துப் போத்தல்களுள் ரப்பர் துண்டுகளும் உடைந்த போத்தல் துண்டுகளும் கண்டெடுக்கப்படுகின்றன. ருபெல்லா தடுப்பூசிப் பாவனையால் மரணம் சம்பவித்துள்ளது. கொமிஷன் பெறுவதற்காக பாவனைக்கு உதவாத மருந்துப் பொருள்களை சுகாதார அமைச்சு இறக்குமதி செய் கிறது.

இந்த மோசடிகளைச் சுட்டிக்காட்டும் வைத்திய அதிகாரிகள் மிரட்டப்படுகின்றனர். இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தால் கருத்துத் தெரிவிக்கும் வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் கஹந்தலியனகே தெரிவித்துள்ளார். (சி)

# ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஆராய்வதற்கு அக்கட்சி நாளை செவ்வாய்க்கிழமை கூடுகின்றது என்றும் ஆனால், இக்கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படும் என நிச்சயமாகக் கூற முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக அவர் நேற்று 'உதயனு'க்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எமது கட்சிக்குள் பல்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. அவை அனைத்தும் நன்கு ஆராயப்பட வேண்டியுள்ளன.

கூட்டமைப்பு சார்பில் ஒரு வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோது அது கூட்டமைப்பால் நிராகரிக்கப்பட்டது. இப்போது சிவாஜிலிங்கம் தனியாகப் போட்டியிடுகின்றார்.

கூட்டமைப்பில் உள்ள எவரும் அவருடன் ஒத்துப்போவதில்லை. அவர் சார்ந்துள்ள ரெலோகூட அவரது முடிவை நிராகரித்துள்ளது.எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பதில் கொள்கை ரீதியாக இல்லாவிட்டாலும் இராஜதந்திர ரீதியாகக் கூட்டமைப்பு முடிவெடுக்க வேண்டும் என்பது எனது கருத்து.

இருப்பினும், நாம் அவசரப்பட்டு எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது. தேர்தலுக்கு இன்னும் 37 நாள்கள் உள்ளன. அதற்குள் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அவை அனைத்தையும் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

தமிழ் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும். அதற்கு ஏதுவாகவே நாம் காய் நகர்த்த வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மீள்குடியேற்றம் போன்றவை நாம் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த முடிவை எடுக்கப்போகிறது என்று தமிழ் மக்கள் எம்மிடம் கேட்கின்றனர். தமிழர்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கட்சி என்பதால் மிகவும் நிதானமாகவே முடிவெடுப்போம். இதில் அவசரப்பட மாட்டோம்.

செவ்வாய்கிழமை மேற்கூறிய விடயம் தொடர்பாக நாம் ஆராயவுள்ளோம். அங்கு பல கருத்துகள் பரிமாறப்படும். அவை கவனத்தில் எடுக்கப்பட்டு அதற்கேற்ப இறுதி முடிவெடுக்கப்படும். ஆனால், செவ்வாய்கிழமையே இறுதி முடிவெடுக்கப்படும் என்று என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாது- என்றார். (அ-சி)

# அகதி முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனக்குக் கிடைத்துள்ளது என பிரிட்டனின் 'ஒப்சேவர்' செய்தித்தாளிற்கு அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இவற்றை உறுதிப்படுத்தும் நிலையில் தாங்கள் இல்லையெனக் குறிப்பிட்டுள்ள அவர் தமிழ் மக்கள் காணாமற்போனமை குறித்த தகவல்களை மறுத்துள்ளார்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களில் தமிழ் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளானதாக அங்கிருந்து வெளியேறித் தற்போது பிரிட்டனில் உள்ள மருத்துவ உதவியாளர் தமிழ்வாணி தெரிவித்துள்ளார்.

முகாம்களில் ஈவிரக்கமற்ற தண்டனைகள் எவ்வாறு வழங்கப்பட்டன, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள் எவ்வாறு காணாமற்போயினர் என்பவைபற்றி அவர் விவரித்துள்ளார்.

செப்ரெம்பரில் விடுதலை செய்யப்பட்டு தற்போது லண்டன் எசெக்ஸில் வாழும் தமிழ்வாணி தனது உறவினர்கள் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த விடயங்களை இதுவரை தெரிவிக்காமலிருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"அது ஒரு தடுப்பு முகாம். அங்கு மக்கள் பேசுவதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. வேலிகளுக்கு அருகில் செல்வதற்கு கூட அனுமதிக்கப்படவில்லை'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அவர்கள் வெளியுலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டனர். மக்கள் தங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ அல்லது காணாமற் போதல், பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்தோ வெளியில் தெரிவிப்பதை அரசு விரும்பவில்லை'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

''பாலியல் துஷ்பிரயோகம் சகஜமான விடயமாகக் காணப்பட்டது. பெண்கள் இதுபற்றி வாய்திறக்கவில்லை. ஏதாவது சொன்னால் தமக்கு எதுவும் நடக்கலாமென அவர்களுக்குத் தெரிந்திருந்தது'' எனவும் தமிழ்வாணி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முறைப்பாடு செய்த மக்கள் தண்டிக்கப்பட்டனர் எனவும், வயோதிபப் பெண் ஒருவரை சிப்பாய் தாக்கியதைக் கண்ணால் கண்ட அதிகாரிகளுடன் தர்க்கம் செய்த மக்கள் வெயிலில் முழங்காலில் பல மணி நேரம் இருத்தப்பட்டனர் எனவும், வெள்ளைவானில் வந்தவர்களால் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முகாம்களில் பாலியல் துஷ்பிரயேகம் மற்றும் மக்கள் தண்டிக்கப்படுதல் குறித்து அரசு அறிந்துள்ளது எனத் தெரிவித்துள்ள ரஜீவ விஜயசிங்க, அதேவேளை, பெரிய அளவில் துஷ்பிரயோகம் இடம்பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

# தமிழர் தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்சேகா அமெரிக்கப் பிரஜை என்றும் அவரால் இங்கு வாக்குக் கேட்க முடியாதென்றும் அரசு கூறுகின்றது.

அப்படியாயின், அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு எப்படி அரசு இராணுவத் தளபதிப் பதவியை வழங்கியது. கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எந்த அடிப்படையில் பாதுகாப்புச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டது?

'சண்டே லீடர்' பத்திரிகையில் வந்து சர்ச்சையை ஏற்படுத்திய பொன்சேகாவின் கூற்று தொடர்பில் பொன்சேகாவே விளக்கம் கொடுத்து அதைச் சரிசெய்துள்ளார். ஆனால், அதைப்பிடித்துக்கொண்டு அரசு பொன்சேகாவை மீண்டும் மீண்டும் தாக்குகின்றது.

சரத் பொன்சேகா நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று அரசு சொல்கிறது. இந்த நாட்டைக் காட்டிக்கொடுத் தது உண்மையில் மஹிந்தவின் அரசுதான். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆலோசனைப்படியே பொன்சேகாவினதும், இராணுத்தில் உள்ள சில முக்கிய அதிகாரிகளினதும் பதவிகள் மாற்றப்பட்டன என்று அரசு பாகிஸ்தான் 'நேசன்' பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தது. இது தொடர்பில் அரசு இன்னும் விளக்கம் கொடுக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவதற்காக ஈ.பி.டி.பி. கட்சி பத்து நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. அவற்றை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் என்ற ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அந்த 10 நிபந்தனைகளுள் ஒன்று தமிழர் தாயகக்கோட்பாடு. அடுத்தது மாகாணசபை ஊடான சுயாட்சி. அப்படியாயின் மஹிந்த ராஜபக்ஷ [illegible] றுக்கொள[illegible] விளக்கமளிக்கவேண்டும். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார முகாமையாளராக டிரான் அலஸ் தெரிவு

கொழும்பு, டிச. 21

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார முகாமையாளராக சர்ச்சைக்குரிய பிரபல வர்த்தகர் டிரான் அலஸ், நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரசார முகாமையாளராக நியமிக்கப் பட்டுள்ள டிரான் அலஸ் கடந்த காலங் களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிதிக் கொடுக்கல் வாங்கல்களைப் பேணினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு வந்தது.

டிரான் அலஸின் ஜே.வி.பி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது எனவும், இந்த நடவடிக் கையால் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு பாதகமான விளைவு கள் ஏற்படக் கூடுமெ னவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதான பிர சார முகாமையாளராக டிரான் அலஸ் நியமிக்கப் பட்டமை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள் ளது என பெயர் குறிப்பிட விரும்பாத ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொட்டாஞ்சேனைப் பகுதியில் வெடிப்புச் சம்பவம்; மூவர் காயம்

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதி யில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிப் புச் சம்பவத்தால் காயமடைந்த மூவர் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் நேற்று மாலை 4.45 மணியளவில் இந்த வெடிப் புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது வீதியில் பய ணித்துக்கொண்டிருந்த மூன்று பாதசாரிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கொட்டாஞ் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சமையில் எரிவாயு சிலிண்டரே வெடிப் புக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகித்த போதும், குறித்த பகுதிக்கு வந்து நிலை மையை பார் வையிட்ட தீயணைப்புப் படையினர் எரிவாயு சிலிண்டர் வெடித்தற் கான அறி குறி எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டனர்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித் துள்ளது. இதேவேளை, மாத்தளை மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சல் பரவுவது ஓரளவு அதிகரித்து உள் ளது என சுகாதார அமைச்சின் பொது சுகாதாரப் பிரதிபணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## காணாமற்போன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கிடைக்கப் பெற்றுள்ளன என ஜனாதி பதி ஆணைக்குழுவின் தலைவர் மஹாணாம திலக்கரட்ன தெரிவித்துள்ளார்.

காணாமல் போயினர் எனத் தெரிவிக் கப்பட்டவர்களில் பலர் வீடு திரும்பியுள் ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காணமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பி லான விசாரணை அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# கையடக்கத்தொலைபேசிகளின் தரத்தை பரிசோதிக்க விரைவில் விசேட அதிகாரிகள் குழு

இலங்கையில் பாவனையிலுள்ள சகல கையடக்கத் தொலை பேசிகளினதும் தரத்தைப் பரிசோதனையிடுவதற்குத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பல்வேறு முறைகளில் நாட்டின் சந்தைக்குத் தரமற்றகையடக்கத் தொலைபேசிகள் கொண்டுவரப்படுகின்றன எனத் தகவல் கள் கிடைத்துள்ளன - என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாய கம் பிரி யந்த காரியப்பெரும தெரிவித்தார். அதற்கிணங்க ஆணைக்குழு வின் விசேட அதிகாரிகள் குழு வொன்று விரைவில் குறித்த பரிசோதனை களை மேற்கொள்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கையடக்கத் தொலைபேசிகளின் அடை யாளத்தை அறிந்து கொள்வதற்காக, சர்வதேசக் குறியீட்டு இலக்கம் உள்ளதா எனப் பரீட் சித்துப் பார்க்கப்படவுள்ளது. இந்த இலக்கங்கள் இல்லாத கையடக் கத் தொலைபேசிகளைச் சந்தைகளில் இருந்து அகற்றுவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என பிரியந்த காரியப்பெரும தெரிவித்தார்.

அதற்கிணங்க எந்வொரு கையடக்கத் தொலைபேசி பாவனை யாளரும் நட்சத்திர குறியீடு - சதுர குறியீடு - பூஜ்ஜியம் - ஆறு - சதுர குறியீடு ஆகிவற்றை தெரிவு செய்து இலக்கம் உள்ளதா என்ப தைப் பரீட்சித்துப் பார்க்க முடியும். அத்துடன் கையடக்கத் தொலை பேசிக ளால் உடல் ஆரோக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படுவதற் கான வாய்ப்பு உள்ளதா என்பது குறித்தும் பரிசோதித்துப் பார்க்கப்படவுள்ளது எனவும் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இலக்கம் இல்லாத கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி பல்வேறு சமூகவிரோதச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அது நாட் டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதாகவும் என தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகின்றது.

இதுதவிர பல்வேறு கொள்ளைக் குழுக்கள் தமது கொள்ளைச் செயல்களை முன்னெடுப்பதற்காக இலக்கம் இல்லாத கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தப்படுகின்றன எனத் தகவல்கள் கிடைத் திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். இவற்றைக் கவனத்திற்கொண்டே இந்தியா அண்மையில் அந்நாட்டில் பயன்படுத்தப்படும் இலக்கம் இல் லாத சுமார் 2 கோடி 50 லட்சம் கையடக்கத் தொலைபேசிகளைச் செயலி ழக்கச் செய்துள்ளது. இலங்கையிலும் கையடக்கத் தொலைபேசிச் சந்தை யும் துரிதமாக விரிவடைந்து செல்வதுடன், ஒரு கோடி 20 லட்சத் துக்கும் மேற்பட்டோர் கையடக்கத் தொலை பேசிகளைப் பயன் படுத்துகின்றனர் என்று கணிப்பீடு கள் மூலம் தெரிய வந்துள்ளது. (அ-சி)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் ஐரோப் பிய ஒன்றியத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்புத் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இதுவரையில் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

எவ்வாறெனினும், இரண்டு வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் ஜனா திபதித் தேர்தலின் போது கண்காணிப்பில் ஈடுபட இணக்கம் தெரிவித்துள்ளன.

பொதுநலவாய நாடுகளின் கண்காணிப் புக் குழு மற்றும் ஆசிய தேர்தல் கண்காணிப்பு குழு ஆகியன எதிர்வரும் தேர்தலில் கண் காணிப்பு பணிகளை மேற்கொள்ள இணங்கி யுள்ளன.

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக்கு முன்னர் தபால் மூல வாக்காளர் பெயர் பட்டியல்கள் உறுதி செய்யப்பட உள்ளது என்று தேர்தல் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிக்க தகுதியுள் ளவர்களுக்கான வாக்குச்சீட்டு அடங்கியப் பொதிகள் அரச நிறுவனங்களுக்கு எதிர் வரும் 4ஆம் திகதி விநியோகிக்கப் படவுள்ளன.

இதேவேளை வடக்கில் வாக்குச் சாவடிகள் அமைப்பது குறித்த இறுதித் தீர் மானம் எதிர் வரும் 31ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள் ளது என்றும் அவர் கூறினார். (அ-சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர் கிழக்கு, உதயநகர்மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு, உலந்தாவில், நாச்சிக்குடா, வல்லவராயன் தெற்கு, காரியாலை, நாகபடுவான், பொன் வெளி, கிராஞ்சி ஆகிய கிராமங்களிலேயே மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் முகாம் களிலிருந்து சென்று உறவினர், நண்பர்க ளின் வீடுகளிலிருந்த இந்த மக்கள் தற்போது சொந்த இடங்களுக் குச் சென்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## சரணடைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே குறித்த செய்தியை சவீந்திர டி சில்வா மறுத்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ, எந்த ஒரு பொதுமகனையும் சுட் டுக் கொல்லுமாறு தனக்குக் கட்டளையிட வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மரணமானமை குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகின் றமை குறித்து கருத்துரைத்துள்ள அவர், தமி ழீழ விடுதலைப்புலிகளின் ஏனைய உறுப்பி னர்கள் கொல்லப்பட்டமையை போன்றே பிரபா கரனும் கொல்லப்பட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் தமக்கு எவ்வித முரண்பாடுகளும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தாம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடப் போகிறார் என வெளியான தகவலையும் சவீந்திர டி சில்வா மறுத்துள்ளார். (அ-சி)


**கட்டடம் விற்பனைக்கு**

யாழ்.ஸ்ரான்லி வீதியில்
அமைந்துள்ள
3600 சதுர அடி பரப்பளவு கொண்ட
இரண்டு மாடிக் கட்டடம்
விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0777880209




**மணமகன் தேவை**

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் தற்போது இங்கிலாந்து பிரஜாவுரிமையுடையவரும் லண்டனில் Qualified Nurse ஆக பணிபுரிபவருமான 35 வயதுடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

அதே துறையைச் சேர்ந்த அல்லது வேறு துறையில் தகைமை பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0775982918 (இலங்கை), 00442086799274 (U.K.)
regi 174@hotmail.lo.uk.




**கணக்கு எழுதிக் கொடுக்கப்படும்**

வங்கிகளுக்கும் வருமான வரிகளுக் கும் தேவையான கடைக் கணக்கு எழுதி முடிவுக்கணக்குகள் செய்து தரப்படும்.

V. M. P. Accounting Service,
183, K. K. S Road, Jaffna.
T. p - 0779272917, 0115011656





## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு விநாயகமூர்த்தி

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாலயம், பிரபல சோதிடர்)



வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கார்த்திகேசு விநாயகமூர்த்தி நேற்று (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி கேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம்- மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமக னும், காலஞ்சென்ற மகிழம்மாவின் அன்புக் கணவரும், உமாபதிசிவம் (சீநோர்), சதானந்தசிவம் (வலி.மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை), சாந்தகுணநாயகி, பத்மசிவம் (கட்டார்), சர்வோதயசிவம் (இலங்கை, மின்சார சபை, சித்தன் கேணி), சுந்தரநாயகி (வவுனியா), சங்கரசிவம் (பிரதேச சபை, சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீ கிருஷாந்தி (ஆசிரியை, திருக்குடும்பம் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), மாலினி, குமுதவல்லி, ஜெகசோதி, மதனகோபால், திலகவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுப்பிரியா, கீதாமிர்தன், ஜோதி ராஜ், சங்கீதா, ஜெசிந்தா, கேந்திரேசன், திலகரேசன், வினிஜா, தர்வ ஜோதி, நர்மதா, சங்கிருஷா, திவ்யா, ரக்சனா, இராஜமனோகரி, தனுஜா, உஜேந்தினி ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2009) திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.உமாபதிசிவம் (சீநோர்)
சகோதரர்களும்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (91675)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org